# அருள்ஜோதி

சுத்த சன்மார்க்கத் தமிழ் திங்களிதழ்

தனிஇதழ் ரூ.10/– ஆண்டு சந்தா ரூ.110/–

அருள்: 27

குரோதி ஆண்டு/ சித்திரை–வைகாசி / மே –2024

மாத பூசத்திருநாள்: 13.05.2024 அடுத்த மாதம் பூசம்: 10.06.2024

ஜோதி: 05



தெய்வத்திரு.

**சதீஷ்ராஜ் அடிகளார்,**

நிறுவனர்

தயவுத்திருமதி.

**தனலட்சுமி அம்மையார்,**

ஆசிரியர், வெளியிடுபவர்

மற்றும் உரிமையாளர்

பதிவு அலுவலகம்:

**திருஅருட்பிரகாச வள்ளலார் அலுவலகம்,**

புதிய எண் 33, பழைய எண். 17, கென்னடி சதுக்கம்,

முதன்மைச்சாலை, சென்னை– 600011.

தொடர்புக்கு: 044–25570770 9003034056


## பொருளடக்கம்


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| வள்ளலாருக்கு மட்டுமே வாய்த்த வரங்கள் | 4 |
| வடலூர் அருட்பயணம் | 7 |
| அருட்பெருஞ்ஜோதி அகவல் உரை | 8 |
| அருள்ஜோதி குருகுல பாடசாலை | 10 |
| காதலும், கடவுளும் | 12 |
| அசைவம் உண்பவர்கள் நல்லவர்கள் இல்லையா? | 13 |
| உயிருக்கும் உடலுக்கும் ஒத்த உறவு | 14 |
| ஆத்ம தரிசனம் | 20 |
| சுக்கு, மிளகு, திப்பிலி, சுலப மருத்துவம் | 23 |
| நீங்கள் யார் என்பதை இந்த கதை உங்களுக்கு புரிய வைக்கும் | 24 |
| மனதை அடக்க இது ஒன்றுதான் வழி | 28 |
| ஒழிவில் ஒடுக்கம் | 32 |

# வள்ளலாருக்கு மட்டுமே வாய்த்த வரங்கள்

(மூன்றாவது தத்துவம்)

## யாராலும் அறியாத உயர்நிலையில் வைத்தது

தன்னுள் ஆண்டவர் வந்து புகுந்து, எவ்வெவ்விடத்தே அவன் எப்படி எப்படி எல்லாம் பூரணமாகக் கலந்து விளங்கி னான் என்று வள்ளலார் பட்டியல் இட்ட பாடலைப் பார்த்தோம்.

முன் 54ம் தலைப்பில் ஆண்டவரது உடல் அங்கங்களைக் கூறியிருப்பதைப் பார்த்தோம். இவ்வாறு தன்னுள் நிரம்பி இருந்த அருட்பெருஞ் ஜோதி பதியின் முழுமையையும் அறிந்தவர் வள்ளலார் ஒருவரே. இப்படிப்பட்ட உயரிய நிலை வள்ளலாருக்குப் போதாது என ஆசைப் படுகிறார் ஆண்டவர். இதற்கு மேலும் ஒரு உயரிய நிலையை அளித்து மகிழ் கின்றாராம்.

மணிமுடி சூட்டினார், செங்கோல் கொடுத்தார், கங்கணம் கரத்தில் அணிந்தார், தனது சகல சுதந்திரங்களை யும் தந்து மகிழ்ந்தார். போதாதற்குத் தமது அருட்பேரொளியை ஈந்தார். வள் ளலார் தம் உடம்பில் புகுந்து அவராக தான் ஆகி மகிழ்ந்த ஆண்டவர் இவ்வள வும் போதாது என ஒரு உயரிய நிலையில் வள்ளலாரை வைத்து மகிழ்ந்தாராம்.

இதனை வள்ளலாரே தம் நடராஜபதி மாலையில் கூறி மகிழ்கின்றார். பாடலைப் பார்ப்போம்.

**ஊராதி தந்தென்னை வளர்க்கின்ற அன்னையே**
**உயர்தந்தை யேஎன் னுள்ளே**
**உற்ற துணை யேஎன்றன் உறவேஎன் அன்பே**
**உவப்பே என் உடைய உயிரே**
**ஆராலும் அறியாத உயர்நிலையில் எனைவைத்த**
**அரசே அருட்ஜோதியே – 3670**

இவ்வாறு தான் ஆனது மட்டுமல்லாது தனக்குரிய அன்னையாகவும், தந்தையா கவும் தனக்குள் உற்ற துணையாகவும், தனக்குரிய உறவாகவும் தனக்குரிய அன் பாகவும், தனக்கே உரிய உவப்பாகவும் உயி ராகவும் விளங்கிய அருட்பெருஞ்ஜோதி யாராலும் அறியாத உயர்நிலையில் தூக்கி வைத்தார் என்று வள்ளலாரே கூறும் பொழுது வள்ளலார் பெற்ற வரங்களை யார் பெற்றார்? பெறத்தான் முடியுமா?

## உலகுக்கு உண்மை இன்பம் செய்வோம் என்று இறைவனையே அழைத்தது

திடம் பெற ஓங்கிய இயற்கைத் தனி இன்ப மயமாம் திருச்சிற்றம்பலந் தனிலே தெய்வம் ஒன்றே 3273 என்று கூறியபடி அருட்ஜோதி ஆண்டவர் இயற்கைத் தனி இன்பமயமானவர். அவர்க்கே உரிய இந்த இயற்கை தனி இன்பத்தை வள்ளலாருக்கு மட்டுமே வழங்கி மகிழ்ந்தவர் ஆண்டவர்.

இந்த இன்பத்தை தாம் பெற்று இன்பம் அனுபவித்த வள்ளலார் இப் படிப்பட்ட உயர்ந்த இன்பத்தை உலக உயிர்கள் அனைத்தும் பெற வேண்டுமே என நினைக்கின்றார். ஏனெனில் “நான் பெற்ற நெடும் பேற்றை ஓதி முடியாது என்போல் இவ்வுலகம் பெறுதல் வேண் டுவனே” என்று இறைவனிடமே கேட் டவர் அல்லவா வள்ளலார்? அதனால்

இந்த இயற்கை தனி இன்பத்தை அனை வரும் பெற வேண்டுமே என எண்ணி எண்ணி ஏங்கினார். வழி தெரியாது தவித்தார். சட்டென ஒரு யோசனை தோன்றியது. நமக்கு அந்த இயற்கை இன்பத்தை தந்தது ஆண்டவர் தாமே. அது அவருக்கு மட்டுமே உரியது தானே! சரி நாம் அவரிடமே போய் நமது விருப்பத்தை கூறுவோம் என எண்ணி ஆண்டவரி டத்தே செல்கின்றார்.



அங்கே ஆண்டவர் அமைதியே வடிவாய் அமர்ந்திருக்கின்றார். வந்த வள்ளலாரை வா! மகனே வா! என வரவேற்கின்றார். வந்த வள்ளலார் நின்றார். அமர்க என ஆண்டவர் கூற அமர்ந்தார்.

அமர்ந்த வள்ளலார் தம் உணர்ச் சியைக் கட்டுப்படுத்த முடியாமல் தானே பேச ஆரம்பிக்கிறார். வா என அழைத்த ஆண்டவர் வந்த விபரம் என்ன என்று கேட்ட பின்னர் தானே பேச ஆரம் பிக்க வேண்டும். இப்படி இருக்க தானே முதலில் பேசிய வள்ளலார்

ஆண்டவரே உம்மை நான் விடமாட் டேன். இது உமது மேல் ஆணையாக உண்மை. எம் பெருமானாகிய நீர் என்னை விட மாட்டீர். இவ்வாறு விட்டுப் பிரியாத நமக்குள், எனக்கு மட்டும் ஒரு விருப்பம் தழைத்தோங்குகிறதே என்றார். என்ன இராமலிங்கம் அதனைக்கூறுக என்றார் ஆண்டவர்.

உம்போல எம்மையும் அழிவற்றதாக நிலைபேறுடையவனாக ஆக்கினீர். உமக்கு மட்டுமே உரிய தனி இயற்கை இன்பத்தை எமக்கும் அளித்தீர்! அந்த இன்பத்தை நான் அனுபவிக்கும் பொழுது ஏற்பட்ட மகிழ்விற்கும் இன்பத்திற்கும் அளவே இல்லை. இப்படி நான் அனுபவித்த

பொழுது எனக்குள் ஓர் ஏக்கம் வர வரப் பெரிதாகியது. ஏன் எனில் நாம் அனுபவிக்கும் இந்த தனி இயற்கை உண்மைப் பேரின்பத்தை நான் மட்டும் அனுபவிக்கக் கூடாதே! இதனை எல்லா உயிர்களும் அனுபவிக்க வேண்டுமே என்னும் ஏக்கம் பெருகியது.

அதனால் ஆண்ட வரே இனியும் இவ்வாறு அமைதியாக அமர்ந் திருக்கவேண்டாம்.எழுந் திருங்கள். வாருங்கள் நாம் இருவரும் அழியா மல் இருப்பது போன்று உயிர்களுக்கெல்லாம் “நம்மிடம் உள்ள தனி இயற்கை இன்பத்தை அளித்து மகிழலாம் வாருங்கள்” என ஆண்டவரே தனக்குரி யது என்றிருந்த இன்பத்தை அவரே இந்த இன்பத்தை உலக உயிர்களுக்குக் கொடுக்க நினையாத இன்பத்தை உலக உயிர்களுக் குக் கொடுத்து மகிழ்வோம் என நினை வூட்டி ஆண்டவரையே புறப்படும்படி அழைக்கிறார் வள்ளலார்.

இந்த அருட்பெருங்கருணை ஆண்டவ ருக்கே இல்லாத பொழுது, வள்ளலாருக்கு வந்தது என்ன? வள்ளலாரை அவரது தனிப் பெருங் கருணையை என்ன என்று, கூறுவது.

“என்னையும் இரக்கம் தன்னையும் ஒன்றாய் இருக்கவே இசைவித்து இவ் வுலகில் மன்னி வாழ்வுறவே வருவித்த கருணை வள்ளல் நீ” என்ற பாடலை நாம் அசைப்போடுவதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியாது. பாடலைப் பார்ப்போம்.

**உன்னைவிட மாட்டேனான் உன்னாணை எம்பெருமான்**
**என்னைவிட மாட்டாய்! இருவருமாய்மன்னி என்றும்**
**வண்மைஎல் லாம்வல்ல வாய்மையரு ளால் உலகுக்**
**குண்மைஇன் பஞ்செய்தும் உவந்து–5394**

இந்த நான்கு வரிப்பாடலுக்குள் எவ்வ ளவு பெரிய செய்திகள். அப்பப்பா.

ARUTPERUNJOTHI
THANIPERUMKARUNAI

Thiruchitrambalam

ARUTPERUNJOTHI
ARUTPERUNJOTHI

## THE HUMBLE ENTREATIES FROM THE CONGREGATION OF THE COMMON AND ULTIMATE SPIRITUAL PATH OF TRUTH AND RECONCILIATION:-

&

# சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்க சிறு விண்ணப்பம்

## [SAMARASA SUTHTHA SANMAARKKA SATHTHIYA SANGA SIRU VINNAPPAM]

Oh God! the Supreme Grace and the absolutely unique authority; the one whom the saints of the common and Ultimate Spiritual Path [Suththa Sanmaarkka Gnanihal] experience through their acts of worshipping, contemplating, realizing, and getting unified with Him by means of innumerable Sacred Words representing His Divine qualities such as the one who is the Natural Truth [Eyarkkai Unmaiyar], the one who is the Natural Knowledge [Eyarkkai Arivinar], the one who is the Natural Bliss [Eyarkkai Inbinar], the one who has no qualities [Nirgunar] the one who has the Characteristics of True Knowledge [Sithgunar], the one who is everlasting [Niththiyar], the one who is the Truth [Saththiyar], the one

who is the only one [Ehar], the one who is also the many [Anaehar], the one who is in the beginning of everything [Aathiyar], the one who is Infinite [Anaathiyar], the one who is free from Impurities [Amalar], the one who is the Supreme Grace Light [Arutperumjothiyar], the one who works Miracles [Arputhar], the one who is free from the impact of any act of miracle [Nirathisayar], the one who is all in all [Yellaamaanavar], the one who has all [Yellaam Udaiyavar] and the one who is omnipotent [Yellam Vallavar] etc., We, who are smaller than the particles of dust, by making use of our little knowledge submit these humble entreaties to the Domain of Divine Grace for the Kind and Gracious act of hearing and redeeming us.




# வடலூர் அருட்பயணம்

## அன்பார்ந்த வாசகப் பெருமக்களுக்கு ஓர் நற்செய்தி!

ஒவ்வொரு மாதப்பூச நன்னாளன்றும் அருள்ஜோதி அன்ன ஆலயம் சார்பாக, வடலூர் அருட்பயணம் ஏற்பாடு செய்யப்படுகிறது.

<u>அருட்பயணத்தில் தரிசிக்கப்படும் திருத்தலங்கள்</u>

1.சத்திய தருமச்சாலை, 2.சத்திய ஞானசபை, 3. வள்ளல் பெருமான் அவதரித்த மருதூர் இல்லம், 4.கருங்குழி இல்லம் 5.தீஞ்சுவை நீரோடை மற்றும் 6. மேட்டுக்குப்பம் சித்திவளாகம்.

இந்தப் புனித பயணத்தில் கலந்துகொள்பவர்கள் ஏழு நாட்களுக்கு முன்னதாகவே பதிவு செய்ய வேண்டும். பதிவுக்கட்டணம் ரூ.900 (உணவு உள்பட) பயணம் அருள்ஜோதி அன்ன ஆலயத்தில் இருந்து காலை 6.30 மணிக்குப் புறப்பட்டு மறுநாள் காலை 5.00 மணிக்கு அழைத்துவரப்படுவர். எனவே பெயர்களை முன்பதிவு செய்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**தொடர்புக்கு: 9003034056**

**மாதப்பூச நாள்: 13-05-2024**

**குறிப்பு: அடுத்த பயணம்: 10-06-2024**

# அருட்பெருஞ்ஜோதி

## அகவல் உரை



### காற்று இயல்

**காற்றுஇடை அசைஇயல் கலைஇயல் உயிர்இயல்**
**ஆற்றலின் அமைத்த அருட்பெருஞ் ஜோதி 462**

காற்றுக்கு பரவுதல், அசைதல், சுழலல், மோதல் ஆகிய பண்புகளும், உடலில் மூச்சாக இயங்கும் தன்மையும், உயிர்வடிவாய் உடல் முழுவதும் நிலவும் இயல்பும் அமைத்தருள்வது அருட்பெருஞ்ஜோதி.

**காற்றுஇடைப் பூஇயல் கருது(உ)று திறவியல்**
**ஆற்றலின் வகுத்த அருட்பெருஞ் ஜோதி 464**

காற்றினிடத்தில் மணம் பரப்புதல், வெப்பத்தால் இலேசாகி மேலேறுதல், கனத்தால் கீழே வருதல் மற்றுமுள்ள விரிவு இயல்புகளும், ஒலி உணர்ச்சிக் கூறுகளும் அருளாற்றலால் அமைத்தருள்வது அருட்பெருஞ்ஜோதி.

**காற்றினில் ஊறுஇயல் காட்டுறு பலபல**
**ஆற்றலின் அமைத்த அருட்பெருஞ் ஜோதி 466**

காற்றின் உணர்வுப் பண்பு (பரிசம்) கொண்டு காணும் வன்மை, மென்மை, இனிமை, கடுமை போன்ற அதன் இயல்புகள் பலவாகத் தனது ஆற்றலால் அமைத்தருளுவது அருட்பெருஞ்ஜோதி.

**காற்றினில் பெருநிலை கருநிலை அளவில**
**ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி 468**

காற்றுக்கு பெருங்காற்றாக (புயல்) வீசும் நிலையும், மிக நுண்ணியதாக ஒடுங்கி உட்பொருள் நிலையாக நிற்றலும், அதில் அளவில்லாத இயல்புகளும், ஆற்றல்களும், மறைந்திருந்து காலத்தே வெளிவந்து பயன்படுதல் ஆகிய பண்புகளை அமைத்தருளியது அருட்பெருஞ்ஜோதி.

**காற்றுஇடை ஈரியல் காட்டி அதில்பல**
**ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி 470**

காற்றினிடம் அசைதல், அசைத்தல் ஆகிய இரு தன்மைகளுடன், மூச்சுக் காற்றில் சூரிய கலை, சந்திர கலை என இருவகையில் இயங்கியும் (உணர்வு, ஓசை ஆகிய இரு இயல்புகளையும்)

பலவகையிலும் செயல்பட அமைத்துள்ளது அருட்பெருஞ்ஜோதி.

**காற்றினில் இடைநடு கடைநடு அகம்புறம்**
**ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி 472**

*காற்றினில் உணரும் முன் உள்ள நிலை, உணரும் நிலை, செல்லுமிடம் தெரியா நிலை மற்றும் உயிர்களின் உள்ளும் புறமும் ஓடிக்கொண்டிருக்கும் நிலை ஆகியன அமைத்துச் செயல்பட வகுத்துள்ளது அருட்பெருஞ்ஜோதி.*

**காற்றினில் குணம்பல கணம்பல வணம்பல**
**ஆற்றலின் அமைத்த அருட்பெருஞ் ஜோதி 474**

*ஒவ்வொரு வகை வாயுவிற்கு ஒவ்வொரு குணமும் நலமும், எரியும் தீ மேலும் எரியவும், தீயினை அணைத்து விடும் தன்மையும் மற்றும் காற்றுக்கு மென்மை, வன்மை குணங்களும், கூடுதல் குறைதல் தன்மையும், நலம் தீங்கு செய்யும் ஆற்றலும் அமைத்துள்ளது அருட்பெருஞ்ஜோதி.*

**காற்றிடைச் சத்திகள் கணக்கில உலப்பில**
**ஆற்றவும் அமைத்த அருட்பெருஞ் ஜோதி 476**

*காற்றுக்கு உள்ள சக்திகள் (ஆக்கல், காத்தல், அழித்தல்) எண்ணற்றனவாய், எக்காலத்தும் கெடாது நிலைபெறுமாறு அமைத்தருளுவது அருட்பெருஞ்ஜோதி.*

**காற்றிடைச் சத்தர்கள் கணிதம் கடந்தன**
**ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ்ஜோதி 478**

*காற்றினிடம் குணம், ஆற்றல், பயன் ஆகிய சக்தியை இயக்கும் ஆற்றல்கள் (இயக்கிகள்), எண்ணற்றனவாகச் செயல்பட அமைத்தருளியது அருட்பெருஞ்ஜோதி.*

**காற்றிடை உயிர்பல கதிபல கலைபல**
**ஆற்றலின் அமைத்த அருட்பெருஞ் ஜோதி 480**

*காற்றினில் பலவாகிய உயிர்களின் தோற்றத்துக்கான ஆற்றலும், அவற்றின் பிறப்பு, செயல்வகை, வாழும் முறை பலவாகத் தனது பேராற்றலால் அமைத்தருள்வது அருட்பெருஞ்ஜோதி.*

**காற்றுஇடை நால்நிலைக் கருவிகள் அனைத்தையும்**
**ஆற்றுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 482**

*இவ்வுடலில் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நான்கு நிலைகளிலும், காற்றின் சக்திகளாகிய சலனம், சலனமின்றி நிற்றல், தெளிவு நிலை, மேலோங்கி எழுதல் ஆகிய நான்கு முறையில் நின்று, அவை நன்கமைந்து செயல்பட அமைத்துள்ளது அருட்பெருஞ்ஜோதி.*

## அருள்ஜோதி அன்ன ஆலயத்திற்கு வருகின்ற அன்பர்களின் அனுபவங்கள்

எனது பெயர் ராஜலிங்கம், நாங்கள் திரு.வி.க. நகரில் வசித்து வருகின்றோம். எனது நண்பர் ஒருவர் அருள்ஜோதி அன்ன ஆலயத்தை அறிமுகப்படுத்தி வைத்தார். நான்கு வருடமாக நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் அன்ன ஆலயத்திற்கு சென்று வந்து கொண்டிருந்தேன். அதன் பின் நான் மனத் தெளிவடைந்தேன். அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் என்னை ஆட்கொண்டு பல அற்புதங்கள் எனது வாழ்வில் நடக்க வைத்தார். இப்பொழுது அருள்ஜோதி அன்ன ஆலயத்தில் நடந்து வரும் அனைத்து பூஜைகளிலும், தடங்கள் இன்றி தவறாது கலந்து கொள்கிறேன். இப்படிப்பட்ட ஒரு பாக்கியத்தை எனக்கு அருளி மனப்பலத்தையும், உடல் பலத்தையும் கொடுத்து வழிநடத்தி கொண்டிருக்கின்ற அருட்பெருஞ்ஜோதி ஆண்டவருக்கு நன்றி.

அருள்ஜோதி குருகுல பாடசாலையில் ஆண்டு விழா நிகழ்வானது சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் சுமித்ரா அம்மா, சிவப்பிரகாசம் ஐயா, உதயக்குமார் ஐயா ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர். பெற்றோர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும், இணைந்து இந்நிகழ்வை சிறப்பாக நிறைவேற்றினார்கள்.











அருள்ஜோதி
பழவேற்காடு




தனிப்பெருங்கருணை
அருட்பெருஞ்ஜோதி
அருள்ஜோதி

# எதைக் கொடுக்கிறீர்களோ அதைவிட அதிகம் பெறுவீர்கள்

# காதலும் கடவுளும்



இதயத்தை அறுத்து தின்னும் மனிதர்களுக்கு இதயம் அற்று போய்விடுகிறது. அவர்களிடத்தில் காதலை எதிர்பார்க்க முடியுமா? காதலும், கடவுளும் மனித இனத்திற்கும், விலங்கினத்திற்கும் பொதுவே. எல்லா விலங்கினங்களுக்கும் இதயம் இருக்கிறது. சில மனிதர்களுக்குத்தான் அது இல்லாமல் போய் விடுகிறது. ஆசை, பாசம், காதல், பயம், வலி, வேதனை போன்றவை எல்லா விலங்கினங்களுக்குள்ளும் உண்டு. மனிதர்களாகிய நாம் அதை மதிப்பதில்லை. ஒவ்வொரு விலங்கும் தன் உயிரை காப்பாற்றிக்கொள்ள ஓடி ஒளிகின்றன. இரக்கம் இல்லாத மனிதர்களிடமிருந்து, அவற்றால் அவ்வளவு எளிதில் தப்பிக்க முடியவில்லை. அந்த உயிரின் இயலாமையை மனிதன் இதமாய் பயன் படுத்திக் கொள்கிறான். இறைவனின் படைப்பில் எல்லா உயிர்களுக்கும் எடை ஒன்றுதான். ஒவ்வொரு உயிருக்கும் வாழும் உரிமை உண்டு. அந்த உரிமையை தட்டிப் பறிக்க நாம் யார்? நாம் அதன் சுதந்திரத்தை அல்லவா சூறையாடுகிறோம். உயிர் கோழியின் விலை குறைவு. உறித்த கோழியின் விலை அதிகம். அப்போது உயிரின் விலை? ஒரு கோடி வலியின் வேதனையை ஒரு நொடியில் கொடுக்கும் அந்த மரண வலியின் விலை? துடி துடித்து இறக்கும் அந்த துடிப்புக்கு விலை? இரக்கமே இல்லாமல் உயிரோடு சுடுநீரில் கோழியை தூக்கிப்போட்டு அமுக்கி கொல்கிறார்களே... அந்த கோழி செய்த பாவம் என்னவோ? வினையை விதைத்தவன் வினையை அறுத்தே ஆக வேண்டும் என்கிறது முன்னோர்களின் முத்தான வரிகள். மறந்துவிடாதீர்கள் நீங்கள் எதைக் கொடுக்கிறீர்களோ அதைப் பெற்றே தீர்வீர்கள். எங்கே? எப்பொழுது என்பதில் தான் வேறுபாடு உள்ளது. இது இயற்கை விதித்த நியதி. உயிரற்ற எவ்வுடலும் பிணம் தான். அறிவுடையவர்கள் அதனை உண்பதில்லை. ஒரு விபத்தில் சிக்கிக்கொண்ட மனிதன் எப்படி வாய்க்குளறி, உடல் வேதனையுற்று, பொறிகள் கலங்கி, உயிர் துடி துடித்து இறக்கிறானோ, அதே வேதனையைத்தான் எல்லா உயிர்களும் அனுபவிக்கின்றன. இதனை எண்ணிப்பாருங்கள், இதுவரை செய்த வினை புரியும்.

# அசைவம் உண்பவர்கள் நல்லவர்கள் இல்லையா?

**கொல்லா விரதமது கொல்லாரை காணில்ஒரு புல்லாக எண்ணி புறமொழிக....**

என்றார் வள்ளல் பெருமான்.

படுகொண்டான் நெஞ்சம்போல் நன்று ஊக்காது. ஒன்றன் உடல் சுவை உண்டால் மனம் என்பார் திருவள்ளுவ பெருந்தகை.

கொலைக்கருவியை கையில் ஏந்தியவன், மனத்தில் கொலைவெறிதான் மிகுந்திருக் குமே அல்லாது நல்லவைக்கு இடம் இருக் காது. அதுபோல் பிற உயிர்களின் உடல் களை உண்டவர் மனத்தில் தீயவையே நிறைந்திருக்கும் அல்லாது நல்லவைக்கு வழி விடாது என்கிறது திருக்குறள்.

எந்த உயிரையும் கொன்று தின்னா மல் வாழ்வதே நல்லவர்களுக்கான அடிப் படை தகுதியாக கூறுகிறது அருளாளர் களின் பாடல்கள். தன் உணவுக்காக ஒரு உயிர் துடிதுடித்து இறப்பதை சகித்துக் கொள்பவர்கள் நிச்சயமாக நல்லவர்க ளாக இருக்க முடியாது என்கிறது.

அறிவியலும், அசைவம் உண்பவர் கள் காமம், கோபம், குரோதம் போன்ற தீய உணர்வுகளை கட்டுப்படுத்த இயலா மல் தவிக்கிறார்கள் என்கிறது. எனவே நல்ல பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று நினைப்பவர்கள் முதலில் கடைபிடிக்க வேண்டியது, கொல்லாமை யும், புலால் உண்ணாமையும்.

**நல்லாா் எனப்படுவது யாதெனின் யாதொன்றும் கொல்லாமை சூழும் நெறி**

என்பார் வள்ளுவ பெருந்தகை. நல்ல வழி என்று சொல்லப்படுவது எது என்றால் அது எந்த உயிரையும் கொல் லாமல் வாழும் நெறி என்கிறார்.

கொடியவரை கொலைபுரிந்து கொலை நீகர்வார் எனினும் குறித்திடும் ஓர்

ஆபத்தில் வருந்துகின்றபோது அதை பார்த்து உகவே அவர் வருத்தம், துன்பம், பயம் தீர்த்து விடுக என்கின்றார் வள்ளல் பெருமான்.

உயிர்களைக் கொன்று அவற்றின் உடலை உண்பவர் கொடியவரே என்றா லும் அவர்களுக்கு ஒரு ஆபத்து என்று வந்து அவர்கள் வருந்தும் பொழுது அவர் களை பார்த்து மகிழக் கூடாது. அந்த ஆபத்தால் உண்டான வருத்தம், துன்பம், பயம் ஆகியவற்றை தீர்த்து விடுக என்று இறைவன் தனக்கு பரிந்துரைத்ததாக குறிப்பிடுகின்றார் வள்ளல் பெருமான்.

## பரிசுப்போட்டி

நம் அருள்ஜோதி சன்மார்க்க மாத இதழில் வெளியாகும் கட்டுரைகளில் இருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான பதில் அளிக்கும் ஒரு வாசகருக்கு அழகிய பரிசு காத்துள்ளது.



### இந்த மாதத்திற்கான கேள்வி

வள்ளல் பெருமானார் மரணமில்லா பெருவாழ்வை அடைவதற்கு எத்தனை ஒழுக்கங்களை அருளியுள்ளார்?

**விடைகள் அனுப்ப வேண்டிய கடைசி தேதி: மே-15**

**விடைகள் அனுப்ப வேண்டிய வாட்ஸ்அப் நம்பர் : 90030 34056**

# உயிருக்கும் உடலுக்கும் ஒத்த உறவு



நோய்வராமல் காக்க வேண்டுமானால், அதற்கு என்ன செய்யவேண்டும் என்பதைப் பார்ப்போம். நமது உடலில் ஐந்து அடுக்குகள் இருக்கின்றன என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அவை :

1. சிற்றறைகள் (Cells) அடுக்கப்பட்ட பரு உடல்.

2. அதற்கு ஊடே ஓடிக் கொண்டிருப்பது நீர், அதாவது, இரத்த ஓட்டம்.

3. நரம்புகளின் மூலமாக நமது உடலின் மின்சார சக்தி வெப்பமாகி, அந்த வெப்பம் உடல்முழுவதும் இன்ன அளவு (Temperature) என்று நீண்டகாலமாகத் தொடர்ந்து வந்த பரிணாமத்தினாலே இவ்வளவு சூடு என்று வந்திருக்கிறதே, அந்த 98.4 டிகிரி பாரன்ஹீட் என்ற வெப்ப நிலை. அந்தச் சீரான வெப்ப நிலை உடலுக்குத் தேவை. அப்பொழுது தான் இரசாயனங்கள் எல்லாம் சேர்ந்து இரத்த ஓட்டம் சரியாக இருக்கும்.

4. அடுத்தது காற்று. இயங்கிக் கொண்டிருக்கிற உடலிலே உருவாகும் கரிய மில வாயுவை வெளியேற்ற, பிராண வாயுவைக் கொண்டு சேர்க்கக் காற்றுத் தேவை.

5. அதற்குமேலே விண். இதனை உயிர் என்றும் சூக்கும உடல் என்றும் வழங்குகிறோம். இப்படியாக ஐந்து அடுக்குகள் நமது உடலில் இயங்கிக்கொண்டு இருக்கின்றன.

இந்த உயிருக்கும் உடலுக்கும் ஒத்த உறவு இனிமையான உறவு இருக்கும்வரையில்தான் உடல் நலமும், மன நலமும் பாதுகாக்கப் பெறும். இந்த உறவானது நீடித்திருப்பதற்கு இரத்த ஓட்டம், வெப்ப ஓட்டம், காற்றோட்டம் இவை மூன்றும் சரியாக இருந்தால்தான் உயிருக்கும், உடலுக்கும் ஒரு தொடரியக்கம், நட்பு, உறவு சீராக இருக்கும். எந்தக் காரணத்தினாலோ இரத்த ஓட்டம், வெப்ப ஓட்டம், காற்று ஓட்டம் இந்த மூன்றிலே ஒன்று தடுக்கப்பட்டாலும், திசைமாறினாலும் வெளியேறினாலும், அளவிலே குறைந்தாலும், ஓட்டத்திலே குழப்பம் அடைந்தாலும் அந்த இடத்தில் அணு அடுக்குச் சீர்குலைவு ஏற்படும். அது இரத்த ஓட்டத்திலோ, வெப்ப ஓட்டத்திலோ, காற்று ஓட்டத்திலோ ஒன்றிலே தடை வந்தால், மற்ற இரண்டும் கூட ஓட்டத்திலே தடை

யாகிவிடும். அந்தக் குழப்பத்தை நீக்குவதற்கு அங்கே இருக்கக்கூடிய மின்சக்தி போதாது. அதனாலே அதிகமான மின் சக்தி அங்கே சேர வேண்டியதாகிறது. அவ்வாறு அங்கே சேரும்போது ஏற்கனவே அங்கு துளை (Puncture) ஆகி இருக்கிறது. அளவுக்கு மேலாகக் காந்த சக்தி மின்சக்தியாக மாறும்போது அந்த இடத்தில் நிச்சயமாக மின் குறுக்கு (Short Cirfuit) உண்டாகும். அதுதான் வலி.

இந்த மின்குறுக்குச் சிறிதுநேரம் இருந்தால் அது வலி என்றும், அது இடத்தாலே விரிந்தும் காலத்தாலே நீடித்தும் இருந்தால் அது நோய் அல்லது வியாதி என்றும் கூறப்படுகிறது. அதற்கும் மேலாக உடலில் உள்ள ஜீவ காந்த சக்தி எல்லாம் அதிகமாகச் செலவாகி, வருவதற்கும் போவதற்கும் மத்தியில் உள்ள இருப்பை ஜீவகாந்தம் வெகுவாகக் குறைக்குமானால் அதனை ஈடு செய்யமுடியாமல் போகும். ஈடுசெய்யும் முயற்சியில் உயிர்ஆற்றல் தோல்வியடையும்.

உடலை நிர்வாகம் செய்வதற்குப் போதிய காந்த சக்தி, ஜீவ காந்த சக்தி, உற்பத்தி செய்யப்பட முடியாமல் தோல்வி ஏற்படும். அந்தத் தோல்வியினாலே உயிர்ச்சக்தி குறைவுபட்டு, அதன் காரணமாக ஏற்படக்கூடிய வெப்பத்தினாலே மின்கலம் (Battery) என்று சொல்லக் கூடிய விந்து நாளத்தைத் தகர்த்தெறிந்துவிட்டு, அதைத் தாங்கி நிற்கக்கூடிய விந்துவையோ அல்லது நாளத்தையோ உடைத்துக்கொண்டு வெளியேறிய பின்னர் அதைத் தாங்கி நிற்கும் உயிர் உடலில் இருந்து பிரிந்து விடும். இதுவே மரணம். இதுதான் உடலியக்கத்தில் உள்ள ஒரு நுட்பம் ஆகும்.

எனவே. இந்த உடலுக்கும் உயிருக்கும் உறவு சரியாக இருக்கவேண்டுமானால் இரத்த ஓட்டம், வெப்ப ஓட்டம், காற்று ஓட்டம் இந்த மூன்றையும் சரியாக வைத்துக் கொள்ள வேண்டும். பல காரணங்களால், நாமாகச் செய்யக்கூடிய தவறான காரியங்களாலேயும், வெளியிலிருந்து வரக்கூடிய தாக்குதல்களாலேயும் சிலசில சமயங்கள் இந்தக் குழப்பங்கள் ஏற்படலாம். இரத்த ஓட்டமோ, வெப்ப ஓட்டமோ, காற்று ஓட்டமோ இவற்றில் தடை ஏற்பட்டால் அதை உடனே சரி செய்து, ஈடுசெய்து கொள்வதற்கேற்ற தாங்கும் சக்தியை (Immunity) நாம் கொஞ்சம் கூட்டி வைத்துக்கொண்டால் பல வியாதிகளைத் தடுத்துக் கொள்ளலாம்.

ஆக நாம் செய்ய வேண்டியதெண்ணி எப்பொழுதும் இரத்த ஓட்டத்தையும் வெப்ப ஓட்டத்தையும், காற்று ஓட்டத்தையும் நன்றாக வைத்துக் கொள்ளவேண்டும்.

★★★

## வயிரத் தனிமணியே!

**சத்தாகிச் சித்தாகி இன்ப மாகிச்**
**சதாநிலையாய் எவ்வுயிர்க்குஞ்**
**சாட்சி யாகி முத்தாகி மாணிக்க**
**மாகித் தெய்வ**
**முழுவயிரத் தனிமணியாய்**
**முளைத்த தேவே.**

–மகாதேவ மாலை



# அருள்ஜோதி அன்ன ஆலய சேவாதாரிகள்



திரு.இரவிசந்திரன் ஐயா



திரு.முத்துராஜ் ஐயா



திரு.ஐயப்பன் ஐயா



திரு. வெங்கட்ராமன் ஐயா



திரு.ஜெகதீசன் ஐயா



திரு. ப.ஐயப்பன் ஐயா



திருமதி. சந்தானலட்சுமி அம்மா



செல்வி.ஜெயஸ்ரீ

**மேற்கண்ட படங்களில் உள்ளவர்கள் நமது அன்ன ஆலய சேவாதாரிகள், மற்றவர்கள் அன்ன ஆலயப் பெயரை உபயோகப்படுத்தினால் கீழ்கண்ட தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

# 90030 34056

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க

# அருள்ஜோதி கல்வி அறக்கட்டளை



எண்: 1 மதுரைசாமி மடம் குறுக்குத்தெரு,
செம்பியம், பெரம்பூர், சென்னை–600011

தொலைபேசி: 9003034056, 9600024878

அருள்ஜோதி

இணையதளம்: www.aruljothitrust.com மின்னஞ்சல்: aruljothipadasalai@gmail.com

## நீங்களும் கல்வித்தொண்டு செய்யலாம்!

அன்புடையீர், வணக்கம்! வாழ்த்துக்கள்!! தாங்களும் தாங்கள் செய்யும் தொழிலும் தொண்டும் மேன்மேலும் சிறந்து விளங்க போற்றி வாழ்த்துகிறோம்.

பொன்னேரி தாலுக்காவில் கடல் சூழ்ந்த லைட்ஹவுஸ் குப்பம் உள்ளது. அவ்விடத்தில் மேற்படி அறக்கட்டளையின்கீழ் அருள்ஜோதி குருகுலப் பாடசாலை என்ற பெயரில் எங்கள் பள்ளி நடைபெறுகிறது. இப்பள்ளியில் எல்.கே.ஜி முதல் 5–ஆம் வகுப்பு வரை ஆங்கில வழி கல்வி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. அரசு அங்கீகாரம் பெற்ற (பதிவெண் 24/239–2005) இப்பள்ளியில் 350 பிள்ளைகள் கல்வி பயின்று வருகின்றனர். அறக்கட்டளையின் சார்பாக இப்பள்ளியில் பயிலும் பிள்ளைகளுக்குச் சீருடையும் பாடப் புத்தகங்களும் வழங்கப்படுகின்றன. இந்தப் புண்ணியத் தொண்டில் தாங்களும் பங்கேற்கலாம். இன்னும் சில ஆண்டுகளில் இப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் உயர்கல்வி பெற்று வாழ்வில் உயர்வடைவதுடன், வள்ளலார் போதனைகளையும் மற்றும் ஆன்மிக கல்வியும் பெறுவதனால் ஒழுக்க நெறியுடன் உத்தம சீலர்களாகவும் திகழ்ந்து வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்ப்பர் என்பது திண்ணம்.



| அன்ன தர்மம் விவரம்: | |
|---|---|
| காலை உணவு........................................... | ரூ.2000/– |
| மதிய உணவு ........................................... | ரூ.5000/– |
| **மதிய சிறப்பு உணவு** | |
| (வடை, பாயாசம் உட்பட)............................ | ரூ.8000/– |

இங்ஙனம்

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க
என்று எண்ணும்
**தவத்திருமதி. தனலட்சுமி அம்மையார்,**
தலைவர்

காணிக்கைகள் **ARULJOTHI EDUCATIONAL TRUST** என்ற பெயருக்கு செக்காகவோ, டி.டி.யாகவோ அனுப்பலாம். பெறப்படும் காணிக்கைகளுக்கு வருமானவரி சட்டம் 80 ஜி பிரிவின்படி வரிவிலக்கு உண்டு.

அருளாளர் பதிவு படிவம்

பெயர்:

முகவரி:

பதிவெண்: __________

























அ
தெ
சதீ
அ


























அருள்ஜோதி அன்ன ஆலயம், அருள்ஜோதி குருகுல பாடசாலை, அருள்ஜோதி ொலைக்காட்சி, அருள்ஜோதி புத்தகம் ஆகியவைகளின் நிறுவனராக ஷ்ராஜ் அடிகளார் ஐயா அவர்களின் குருபூஜை நிகழ்வானது 10/04/2024 ன்று சிறப்பாக நடைபெற்றது.



## ஆத்ம தரிசனம்

# நம்மை நாமே திருத்திக்கொள்வது

**சீடன் : நான் என்னுடைய ஆத்மாவுடன் எப்படிச் சம்பந்தப்பட்டிருப்பது?**

**குரு :** இது மிகவும் சுலபம். நீ எதையும் கற்பனை செய்யாதே. நீ இறைவன் அல்லது அன்னை அல்லது குருவின் கரங்களில் ஒரு குழந்தை என்று புரிந்து கொள். இந்த உலகம் என்ற பெரிய நாடக மேடையில் நீ ஒரு சிறிய பொம்மலாட்டப் பொம்மை. இறைவன், மறைமுகமாக இருக்கும் நூலை அசைத்தால்தான் நீ உன் அங்கங்களை அசைக்க முடியும். மேலிருந்து நூல் இழுக்கப்படுவதற்கு ஏற்பவே நீ உனது கைகளை ஆச்சரியத்துடன் தட்டவோ அல்லது மரியாதையுடன் கூப்பவோ முடியும். நீ இதைப் புரிந்துகொண்டால் நீ உன் ஆத்மாவுடன் லயமாகி இருப்பாய். உன் மூலம் நடக்கும் எதற்குமே நீ பரவசப்படவோ, ஆச்சரியப்படவோ மாட்டாய். அதேபோல், எது நேர்ந்தாலும் அதற்காக வருந்தவும் மாட்டாய். பொம்மலாட்டத்தில் ஆடும் பொம்மை சதா புன்னகையுடன் இருக்கும். அந்தப் பொம்மையின்மீது கல் விழுந்தால் அதற்காக அழுவதில்லை. மலர் மாரி பொழிந்தாலும் அது ஆனந்திப்பதில்லை. அடக்கத்துடன் இருப்பவர்களுக்கு இது எப்பொழுதும் ஓர் எளிமையான விஷயமாகும். எதையும் நீ செய்வதாக எண்ணாதே. ‘அவனன்றி ஓர் அணுவும் அசையாது.’

**சீடன்: நான் என் ஆத்மாவுடன் லயமடைவதற்குத் தோதான உணர்வுகளை எவ்வாறு தக்க வைத்துக்கொள்வது?**

**குரு :** உன்னிடமிருக்கும் தேவையற்ற குணங்களின்மீது வெறுப்போ அல்லது எரிச்சலோ கொள்ளாதே. உனது வீட்டில் தரை குப்பையாக இருக்கிறது என்று வைத்துக்கொள். நீ என்ன செய்ய வேண்டும்? எதிர்ப்போ எரிச்சலோ கொள்ளக்கூடாது. உடனடியாக ஆர்ப்பாட்டமின்றி அமைதியாக அதை அகற்றிவிடு. அப்படிச் செய்யாமல் எரிச்சலடைந்து கூக்குரலிட்டு நாம் நம் நிலையை இழப்பதில் என்ன பயன் ? பிறரின் தவறான செயல்களுக்கோ அல்லது தேவையற்ற வார்த்தைகளுக்கோ நீ உணர்ச்சி வசப்பட்டு உன் சமநிலையை இழக்காதே. உன் வீட்டின் தரையை இன்று சுத்தம் செய்தால் அதற்காக நீ மகிழ்ச்சியடைந்து, அதுதான் உன் வாழ்வின் குறிக்கோள் என்று எண்ணாதே. ஒரு விஷயத்தை உன்னிடம் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்றால் அதையே மீண்டும் மீண்டும் செய்ய வேண்டும். ஆடிப் பாடி வேலை செய்தால் களைப்பு தெரியாது. விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்டுச் செயல்படுபவன் சுலபமாக ஆன்மாவுடன் லயமாகிவிடுவான். நீ எந்த வேலையையும் அதன் காரண காரியத்தில் உன் மனத்தைச் செலுத்தாமல் இலேசான மனத்துடன் செய். உனக்கு எந்தச் சிரமமும் தெரியாது.

**சீடன்: தன்னை ஈடுபடுத்திக்கொள்ளாமல் ஒருவனால் கோபிக்க முடியுமா?**

**குரு:** முடியும். இறைதூதர்கள் அவ்வாறு இருப்பார்கள். அவர்கள் கட்டளையில் இடியோசை கேட்கும். ஆனால், அந்தத் தீர்மானமான ரௌத்திரத்தில் அவர்கள் மனம் ஈடுபட்டிருக்காது. கிருஷ்ணன் உடைந்த தேர்ச்சக்கரத்தைக் கையிலெடுத்து பீஷ்மரைக் கண் சிவக்கப் பார்த்தபோது, அவன் புஜம் போர் செய்யத் துடித்தது போல் பிறருக்குத் தோன்றியிருக்கலாம். ஆனால், சிவந்த கண்களுக்குள்ளே உள்ள கிருஷ்ணனைப் பீஷ்மர் அறிவார். அதனால் எந்த விதக் குழப்பமும் ஏற்ப

டாமல் கிருஷ்ணனைப் பீஷ்மர் சிரித்தபடி வரவேற்றார். யார் நமக்கு வழிகாட்டி, யார் உண்மையைப் பின்பற்றுபவர் என்றெல்லாம் நமக்குத் தெரியும். இதில் பிரச்சினை என்னவென்றால், அவரை நாம் சதா பின் தொடராததுதான்.

இறைதூதரின் மனத்தில் விவாதம் இராது. விவாதம் என்பது வெறுக்கக் கூடிய ஒரு விஷயமல்ல. விவாதமே தவறு என்று மனிதன் எண்ணக்கூடாது. நீ உன்னுடன் விவாதம் செய்ய வேண்டும். விவாதம் ஒழுங்கான முறையில் இருந்தால் அது ஆரோக்யமானது. ஒழுங்கற்று இருந்தால் அது கேடு விளைவிக்கும். விவாதத்திற்கு இரண்டு பக்கங்களுண்டு; ஓர் இறுதியான முடிவு உண்டு. நீ எப்பொழுதும் முறையான கட்சியில் சேர்ந்து அதைப் பலப்படுத்து.

**சீடன் : மஹான்களுடன் என்னை ஒப்பிட்டு, அவர்களுக்குச் சமமாக என்னைக் கருதிக்கொள்வது தவறா?**

**குரு:** இல்லை. நீ ஒரு நல்ல காரியம் செய்யும் பொழுது அவர்களை நினைக்காமல் இருப்பதுதான் முட்டாள்தனம். நீ ஓர் உயர்ந்த நோக்கத்தோடு காரியத்தில் ஈடுபடும் பொழுது பெரிய மகான்கள் அல்லது இறைதூதர்கள் பற்றிய நினைவு உனக்கு வருவது இயற்கையானது. நீ உன்னை ஏசுவாகவோ, அல்லது இறைதூதனாகவோ கருதிக்கொள்ளக்கூடாது. ஆனால், அவர்களும் ஒப்புக்கொள்ளும் விதத்தில் நீ செயல்பட்டாயா என்று உன்னை நீ எடை போட்டுக்கொள்ளலாம். அவர்களும் இவ்வாறே தங்கள் வாழ்க்கையைத் தொடங்கி இருப்பார்கள் என்றுகூட எண்ணலாம்.

**சீடன் : கோபத்திலிருந்து எப்படி வெளிவருவது?**

**குரு:** முதலில் உனக்குக் கோபம் உள்ளது என்று ஒப்புக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் நீ அதிலிருந்து வெளிவர முடியும். உன்னிடம் ஒரு புறம் கோபம் இருந்தாலும், உன்னுள் ஓர் அழகான குழந்தை மனமும் உள்ளது. நீ கூடுமான வரையில் அந்தக் குழந்தையின் உணர்வோடு உன்னை ஐக்கியப் படுத்திக்கொள். ஒருவன் குழந்தையிடம் கத்துவதன் மூலம் அதை அடக்க முடியாது. சில சமயங்களில் குழந்தை தன் தாயின் கோபத்தையும், தந்தையின் ஆர்ப்பாட்டத்தையும் கண்டு ஆச்சரியம் கொள்ளும். நீ குழந்தையாக இவ்வுலகைப் பார்க்கத் தொடங்கினால் உன் கோபம் வெளியேறிவிடும். மற்றவர்களிடம் கோபப்பட நமக்கு எந்த உரிமையும் கிடையாது. கோபம் கொள்வது தோல்வியே. தோல்வியைத் தொடர்கதையாக்குவது நிவர்த்தி செய்ய முடியாத அளவிற்குக் கேடு விளைவிக்கும். அதனால் கவனமாக இருக்க வேண்டும். உன் உள்ளிருக்கும் குழந்தைத் தன்மையை வளர்த்துக் கொள். கோபத்தை விட்டுவிடு.

**சீடன் : நீங்கள் கோபத்தை விடவேண்டும் என்று கூறினீர்கள். இதை எவ்வாறு செய்வது ?**

குரு: அடிப்படையான ஒரு விஷயத்திற்குச் செல். உனக்குக் கோபம் வரும் பொழுது அதை ஒத்தி போட்டால், உனக்குச் சிறிது அவகாசம் கிடைக்கும். அந்த அவகாசத்தில் ‘என் கோபத்தை இன்னும் சிறிது நேரம் ஒத்திவைக்கிறேன்’ என்று உனக்கு நீயே கூறிக்கொள். இவ்வாறு செய்துகொண்டிருந்தால் கோபம் தீர்ந்து கருணை மேலோங்கும்; நிலைமையைப் புரிந்துகொண்டு அதை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் உண்டாகும். நமக்குள் ஊற்றெடுக்கும் கருணையைத் தடுக்கும் அரக்கனல்லவா, கோபம் என்பது. இதில் விசித்திரம் என்னவென்றால், கோபம் நம்முடையது அல்ல. கருணை நம் பொக்கிஷம். ஆனால், அதை அடைய முடியாமல் தடுக்கும் கோபம் என்ற தந்திரசாலியான அரக்கனை வெளியேற்று. உன் குறைகளை

எவரேனும் சுட்டிக் காட்டினால், அதை உடனே எதிர்க்காதே. எதிர்த்தால், மேலும் தவறு செய்தவனாகிறாய். பொறுமையாய் இரு. கருணையால்தான் கோபத்தைச் சமாளிக்க முடியும். இறைதூதர்கள் சகிப்புத்தன்மை, பொறுமை, கருணை இவற்றின் மூலந்தான் பாடம் கற்பிக்கிறார்கள். உனக்கு ஏற்படும் இன்னல்களையெல்லாம் உன் முன்னேற்றத்திற்கான படிக்கற்களாக மாற்றிக்கொள். அத்தகைய வாய்ப்புகளை, நாம் மேலும் முன்னேறுவதற்கு முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**சீடன்: கோபத்தில் நிறைய விதங்கள் உள்ளன. சில சமயம் எனக்கு என்மீதே காரணமின்றிக் கோபம் உண்டாகும். சில சமயம் மற்றவரின் நடத்தை குறித்துக் கோபம் உண்டாகும்.**


**குரு:** எல்லாம் கோபமாகாது. சில சமயத்தில் உனக்குப் பசி ஏற்பட்டதாக நினைப்பாய். ஆனால், அது உண்மையில் பசியாக இருக்காது. அநேக சமயங்களில் பசி என்பது வெறும் உணர்வாக இருக்கக் கூடும். கோபமும் அப்படித்தான். சில சமயங்களில் உடலோ, மனமோ சோர்வாக இருக்கும் போது அதைக் கோபம் என்று நினைத்துக்கொள்கிறாய். நீ சற்று நிதானித்தால் இந்தக் குழப்பங்களைத் தவிர்க்கலாம். உனது கோபத்திற்கு நீயேதான் காரணம்.

**சீடன் : கோபம் என்பது நானாகவே சேர்த்துக்கொண்ட ஒரு குணக்கேடா?**

**குரு:** இல்லை. அது ஒரு திருத்தப்படாத தவறாகும். வெண்ணெயை உருக்கினால் நெய் கிடைக்கும். அதை வடிகட்டும் போது கசடுகள் நீங்கும். ஆனால், அந்த வெண்ணெயில் கசடுகள் தெரிவதில்லை. அது போல், உன்னை நீ திருத்திக்கொண்டால்தான் கோபம் என்கிற கசடு வெளியேறும்.

**சீடன்: விரதம் என்றால் என்ன?**

**குரு:** உன்னை ஒருவன் திட்டினாலுங்



கூட நீ அன்பு மாறாமல் அவனுக்காகப் பிரார்த்தனை செய்தால் அதுவே விரதம். வேறு எதுவும் விரதம் ஆகாது.

**சீடன்: சில சந்தர்ப்பங்களில் ஒரு காரணம் கருதி நான் கோபிப்பது போல் நடிக்க வேண்டியிருக்கிறது.**

**குரு:** எல்லோருமே அவ்வாறு செய்வார்கள். அது கோபமாகாது. தன் குழந்தை பாம்பைப் பிடிப்பதை ஒரு தாய் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியாது. அந்தத் தாயின் கடமை என்னவென்றால், அதைத் தடுத்து நிறுத்தி, அந்தக் குழந்தையைக் கோபித்துக் கண்டிப்பதாகும். 'கோபம் கூடாது' என்று ஓர் ஆசனத்தில் அமர்ந்து பிரார்த்தனை செய்ய முடியுமா அப்போது? சில சமயத்தில் சில காரணங்களுக்காகப் பிறர் முன்னிலையில் கோபம் இருப்பது போல் நடிக்க வேண்டியிருக்கும். ஆனால், உனக்கு எந்தக் கோபமும் அதில் இருக்காது. இவ்வாறான வழிமுறைகளைப் பின்பற்றிப் பிறருக்காக உன் உள்ளிருந்து பிரார்த்தனை செய்தல் நலம் பயக்கும்.

# சுக்கு, மிளகு, திப்பிலி, சுலப மருத்துவம்

## சுகம் தரும் சுக்கு

இஞ்சியை பக்குவப்படுத்தி உலர்த்தி எடுத்தால் சுக்கு எனும் புதிய அவதாரமெடுக்கின்றது. அந்தக் காலத்தி லெல்லாம் மக்கள் அன்றாடம் அதை பயன்படுத்திய தால், பல நோய்கள் கிட்டே வரவே பயந்து ஒதுங்கின. ஆனால் இன்றைய நாகரீக உலகம் சுக்கை சுத்தமா கவே மறந்துவிட்டது! அதிலும் இளந்தலை முறையின ருக்கு அது என்னவென்றே தெரியாது!

'சுக்கிற்கு மிஞ்சிய மருந்துமில்லை. சுப்பிரமணி யரை விஞ்சிய சாமியுமில்லை' என்று அதன் மகத்து வம் அறிந்தோர் சொல்லுவார்கள். சுமார் 30க்கு மேற் பட்ட மருத்துவ குணம் கொண்ட மகத்தான பொருள் சுக்கு. அன்றாட வாழ்க்கையில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை, அதைப் பயன்படுத்தி வந்தால், பல நோய்களை பக்கத்தில் வராமலேயே விரட்டி அடித்து விடலாம்.

கற்பக மருந்து என்னும் சிறப்பைப் பெற்றுள்ள சுக்கு, பல நோய்களை சுக்கு நூறாக உடைத்தெறியும் ஆற்றல் பெற்றுள்ளதால், அந்தப் பெயரும் அருமை யாக அமைந்துள்ளது. எனினும் அதன் அருமையை அனைவரும் அறிந்து பயனுற வேண்டும் என்ற எண்ணமே இன்று நூல் வடிவில் உங்கள் கையில் தவழுகின்றது. விலையில் வேண் டுமானால் சுக்கு மலிவாக இருக்கலாம். ஆனால் வீரியத்தில் சூரனைப் போன்றது. அதைப் பற்றி இனி அறியலாம்.



நரம்பு மண்டலங்களில் செயல்படும் ஆற்றல் அதிலிருப்பதால் வாதம் தொடர் பான நோய்கள் வராமல் பாதுகாக்கும். செரிமான உறுப்புகளை சிறப்பாக செயல் பட வைக்கும் என்பதால் வயிற்று வலி, செரியாமை, பசியின்மை, சீதபேதி, ஆகிய வற்றை துரத்தியடிப்பதுடன், வயிற்றுள்ள பூச்சி களையும் ஒழித்து வெளியேற்றும்.

மேலும் சூதக வாயு, சூதாகக் கட்டு ஆகி யவற்றை போக்குவதுடன், இடுப்பு வலி, ஒற்றைத் தலைவலி, காது குத்துதல், பல்வலி, முதலியவற்றையும் நீக்கும். தொந்தி விழாமல் கொழுப்பைக் கரைத்து வெளியேற்றும். இவை அனைத்திற்கும் சிகரம் வைத்தது போல, அது ஆண்மை வலிவைக் கொடுக்கும். இவ்வளவு மகா சக்தி வாய்ந்த சுக்கை எப்படி பயன் படுத்தலாம் என்பதை கீழே காணவும்.

## வாய்வு நீங்க

சுக்கை தோல் நீக்கி 12 கிராம் எடுத்து மென்மை யாக பொடியாக அரைத்து பாட்டிலில் போட்டுக் கொள் ளவும். ஒரு தம்ளர் பசும்பாலை காய்ச்சி சிறிது பனங்கற் கண்டு சேர்த்து வடிகட்டி 2 கிராம் அளவு சுக்குத் தூளை கலந்து காலை வெறும் வயிற்றிலும், மதிய சாப்பாட்டிற்கு மூணரை மணி நேரம் கழித்தும் இவ்வாறு தினம் இரண்டு வேளை வீதம் மூன்று நாட்கள் சாப்பிட்டால் வாய்வு வந்த வழியைப் பார்த்துக் கொண்டு பறந்து விடும்.

## தலைவலி போக

ஆறுசிட்டிகை சுக்குத்துளை தாய்பாலில் குழைத்து நெற்றிப் பொட்டுகளில் பற்றாகப் போட்டு வைத்தால், சாதாரணத் தலைவலி, தறிகெட்டு ஓடி விடும்.

**தலை வலி ஓர் விளக்கம் :** உடலில் ஏற்பட்டுள்ள பழுதை அறிவிக்கும் அபாய மணி போன்றதுதான் தலைவலி என்பது. கண்ணில் ஏற்படும் கோளாறு, மலக்கட்டு, உயர் இரத்த அழுத்தம், காது மக்கு தொடர் பான நோய்கள், தூக்கமின்மை, ஓயாத மன அழுத் தம், இதயக் கோளாறு, கோபம், பல்நோய், மூளையில் ஏற்படும் கட்டி, அளவுக்கு மீறி வெயிலில் அலைதல் முதலிய பல்வேறு காரணங்களால் தலைவலி ஏற்படலாம். சில ஒவ்வாமை அடிப்படையில் சாதாரணமாக வரும் தலைவலி ஒரு சில மணி நேரங்களில் நீங்கி விடும். ஆனால் தொடர்ந்து தினசரி தலைவலி ஏற்பட்டால் மருத்துவரை சந்திக் கவும்.

## இரத்தக்கட்டு வடிய

சுக்கு 20 கிராம், கடுக்காய் 10 கிராம், புளி 10 கிராம் ஆகியவற்றை ஒன்றாகச் சேர்த்து இடித்து, மண் சட்டியில்போட்டு ஒரு தம்ளர் தண்ணீரை ஊற்றி நன்றாகக் கொதிக்கவிட்டு, கெட்டியாக சுண்டியதும் இறக்கி வைத்து, சற்று இளஞ்சூட்டுடன் வீக் கத்தின் மேல் காலை மாலை இரவு பற்று போட்டால் நிவாரணம் கிடைக்கும். வீக்கம்வ டியும் வரை தினசரி இவ்வாறு செய்யலாம்.

# நீங்கள் யார் என்பதை இந்த கதை உங்களுக்கு புரிய வைக்கும்

வாலிபன் ஒருவன் தன் வாழ்க்கையில் எல்லாவற்றையும் இழந்து, இனி இந்த வாழ்க்கையே வேண்டாம் என்று தற்கொலை செய்து கொள்ள முடிவெடுத்து ஒரு மலையை நோக்கி சென்றான். மலையின் உச்சிக்கு சென்றவன் "இறைவா இந்த உலகம் சுயநலமானது. இந்த உலகத்தில் நல்லவர்களுக்கு இடமில்லை. அதனால் நான் உன்னிடமே வருகிறேன் என்னை ஏற்றுக்கொள்" என்று மலையில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொள்ள தயாரானான்.

அப்போது அருகில் இருந்த மரத்தடியில் அமர்ந்திருந்த முனிவர் ஒருவர் இவனின் செயல்களை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தார். இவன் தற்கொலைக்கு முயல்வதை பார்த்த முனிவர் அவனை தடுத்து நிறுத்தி மகனே, உன் பிரச்சனை என்ன? அப்படி எவ்வளவு பெரிய பிரச்சினையாக இருந்தாலும் அதற்கு தற்கொலை என்பது தீர்வாகாது என்று கோபமாக கூறினார்.

முனிவரே உங்களுக்கு, என் வாழ்க்கையைப் பற்றி எதுவும் தெரியாது. என்னை சுற்றி இருப்பவர்கள் அனைவரும் சுயநலக்காரர்கள் அவர்களுக்கு தேவை இருக்கும் வரை மட்டுமே என்னுடன் பழகுவார்கள். தேவை முடிந்ததும் என்னை தூக்கி எறிந்து விடுவார்கள். என்னுடைய முதலாளிகள் என் உழைப்பை திருடிக் கொண்டு இதுநாள் வரை என்னை ஏமாற்றினார்கள். இவற்றையெல்லாம் தாண்டி என் உயிராக நினைத்த என் மனைவியும் என்னிடம் செல்வம் இல்லை என்ற ஒரே காரணத்திற்காக, ஒரு செல்வந்தனுடன் சென்று விட்டால். இதற்கு மேல் நான் வாழ்வதில் எந்த அர்த்தமும் இல்லை என்று அழுது புலம்பினான்.

அவனுக்கு ஆறுதல் கூறிய முனிவர் மகனே, நீ சுயநலகாரன் இல்லை என்பதை நான் எப்படி நம்புவது?. எல்லோரையும் குறைகூறும் நீ எப்படி நல்லவனாக இருக்க முடியும் என்று கேட்டார்.

இதைக் கேட்டதும் கோபமடைந்த வாலிபன். முனிவரே, நான் எதை செய்தால் நான் சுயநலக்காரன் இல்லை என்பதையும், இது நாள் வரை என் மீது ஆசையே இல்லாதவன் என்பதையும் நீங்கள் நம்புவீர்கள் என்று கேட்டான்.

அப்படி என்றால் என்னுடன் வா, என்னுடைய ஆசிரமத்தில் தங்கி நீ நல்லவன் என்பதை நிரூபித்து காட்டு என்று அந்த வாலிபனை தன்னுடன் அழைத்துக் கொண்டு ஆசிரமம் வந்து சேர்ந்தார். அங்கிருந்த மாணவர்களிடம் இந்த வாலிபன் யார் என்பதை கூறி அறிமுகப்படுத்தி வைத்தார்.

மறுநாள் பக்கத்து ஊருக்கு சென்று பிச்சை எடுத்து வரும்படி அந்த வாலிபனை முனிவர் அனுப்பி வைத்தார். நான் பிச்சை எடுப்பதா என்ற எண்ணம் அவன் மனதிற்குள் தோன்றியது. ஆனால் முனிவரின் இந்த செயலுக்கு பின்னால் ஏதேனும் காரணம் இருக்கும் என்று எண்ணி பிச்சை எடுத்துக் கொண்டு ஆசிரமத்திற்கு வந்து சேர்ந்தான். அவன் பிச்சை எடுத்துக் கொண்டு வந்திருப்பதை பார்த்த முனிவர், நீ தலைக்கனத்துடன் இந்த வேலையை செய்ய மாட்டாய் என்று நினைத்தேன். ஆனால் வெற்றிகரமாக இந்த வேலையை செய்து என் எண்ணத்தை மாற்றிவிட்டாய் என்று மனதார பாராட்டினர்.

இப்படியே நாட்கள் சென்று கொண்டிருக்க ஒருநாள் பக்கத்து கிராமத்திற்கு ஆன்மீக பயணமாக புறப்பட்டார் முனிவர். தன்னுடன் சில சீடர்களையும், அந்த வாலிபனையும் அழைத்துக் கொண்டு காட்டு வழியில் நடந்து கொண்டிருந்தார், அப்போது எதிர்பாராத விதமாக சிங்கம் ஒன்று அவர்களை

தாக்க பாய்ந்து வந்தது, அதைப் பார்த்த சீடர்கள் ஆளுக்கு ஒரு திசையில் ஓடி சென்று மறைந்து கொள்ள, முனிவரால் வேகமாக ஓட முடியாமல் அங்கேயே பயத்துடன் நின்றுக் கொண்டிருந்தார். கொஞ்சம் கொஞ்சமாக முனிவரின் உடல் பயத்தால் நடுங்கிக் கொண்டிருப்பதை மறைவாக ஒளிந்திருந்த சீடர்கள் பார்த் துக் கொண்டே இருந்தனர். அப்போது அந்த வாலிபன், ஒரு பெரிய கட்டையை எடுத்துக் கொண்டு வேகமாக முனிவரை தாக்க வரும் சிங்கத்தை தன்னுடைய முழு பலத்தையும் பயன்படுத்தி விரட்டி அடித்தான்.

உடனே ஆசிரமத்திற்கு திரும்பி வந்த முனிவர், அங்கிருந்த சீடர்கள் அனைவரை யும் தன் முன்னாள் வரும்படி உத்தரவிட் டார். பின்பு அவர்களைப் பார்த்து, சீடர் களே, எனக்குப் பிறகு இந்த ஆசிரமத்தை யார் கவனித்துக் கொள்வார்கள் என்ற கவலை எனக்கு வெகு நாட்களாக இருந்தது. இன்றுடன் அந்த கவலைக்கு பதில் கிடைத் துவிட்டது. இதோ இந்த வாலிபன் தான் எனக்கு பிறகு இந்த ஆசிரமத்தின் மொத்த பொறுப்புகளையும் ஏற்றுக்கொள்வான். அவனுடைய கட்டளைக்கு அடிபணிந்து நீங்கள் நடந்து கொள்ள வேண்டும் என்று அனைவரிடமும், தன்னுடைய அறிவிப்பை முனிவர் கூறினார்.

இதை கொஞ்சமும் எதிர்பார்க்காத வாலிபன், மகிழ்ச்சியில் துள்ளி குதித் தான். தன் மனதிற்குள், தான் இந்த ஆசிரமத்திற்கு அடுத்த அதிபதி என்ற ஆசையை கொஞ்சம் கொஞ்சமாக வளர்த்துக் கொண்டான். இப்படியே நாட்கள் சென்று கொண்டிருக்க ஒருநாள் முனிவரின் உடல்நிலை பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையானார். சீடர்களும், எவ் வளவோ வைத்தியர்களை வரவழைத்து வைத்தியம் பார்த்தார்கள். ஆனால் முனி வரின் ஆரோக்கியத்தில் எந்த முன்னேற் றமும் ஏற்படவில்லை. இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த வாலிபன், தன் மனதிற்குள், எல்லை இல்லா மகிழ்ச்சி அடைந்தான். இனி கொஞ்ச நாட்களில், தான் தான் இந்த ஆசிரமத்திற்கு அதிபதி என்று நினைக்கும் போதே அவனின் மனம் ஆனந்தத்தில் ஆர்ப்பரித்தது. ஆனால் இவன் நினைப்பது போல் எதுவும் நடக் கவில்லை ஒரு புகழ்பெற்ற வைத்தியரின் மருந்துகளால் முனிவர் கொஞ்சம் கொஞ் சமாக உடல்நிலை தேறி வருவதை கவ னித்து மனதிற்குள் வேதனைப்பட்டான்.

முனிவர் உயிருடன் திரும்பி வந்தால் தன்னுடைய ஆசை எதுவும் நிறைவே றாது என்று மனதிற்குள் நினைத்தவன், ஒரு கட்டத்தில் முனிவரை கொன் றுவிட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான். எப்படி கொல்வது என்று பல திட்டங்களை போட்டுப்பார்த்தான். ஒவ்வொரு திட்டத்திலும் ஏதோ ஒரு குறை இருப்பதை உணர்ந்தவன், ஒரு முறை முனிவர் தன்னை ஒரு அறைக்கு அழைத் துச் சென்று, ஒரு பானையை காண்பித்து மகனே, இந்த பானையில் விஷம் இருக் கிறது. இந்த விஷத்தை ஒருவர் அருந்தி னால் இயற்கையான முறையில் மரணம் அடைந்தது போலவே இருக்குமே தவிர, யாராலும் இந்த விஷத்தால் தான் உயிர் பிரிந்தது என்று கண்டுபிடிக்க முடியாது என்று முனிவர் கூறியது நினைவுக்கு வர இதுதான் சரியான வழி என்று முனிவரை கொல்ல புறப்பட்டான்.

அனைவரும் உறங்கியப்பிறகு மெதுவாக அந்த பானை இருக்கும் அறைக்கு சென்ற வன் அந்த விஷத்தை எடுத்து வந்து முனி வரின் வாயில் ஊற்றினான். மறுநாள் காலை முனிவரின் அறையில் இருந்த சீடர்களின் அழுக்குரல் கேட்டதை கேட்டு மனமகிழ்ச்சியோடு அங்கேயே சென்று பார்த்தான். முனிவர் மரணமடைந்ததை பார்த்தவன் அடுத்ததாக ஆசிரமத்தின் பொறுப்புகளை தன்னுடைய கட்டுப் பாட்டிற்குள் கொண்டுவருவதற்கான வேலைகளை பார்க்கத் தொடங்கினான்.

சிறிது நேரம் கழித்து அந்த முனிவ ரின் பழைய சீடன் ஒருவன் முனிவரின் மரணத்தை அறிந்து அவரை பார்க்க

வந்தான். அவரின் முகத்தை பார்த்து ஏதோ சந்தேகப்பட்டவனாக அந்த விஷம் வைக்கப்பட்டிருந்த பானையை சென்று பார்த்தான். அதில் விஷம் இல்லாததை பார்த்து அதிர்ச்சி அடைந்தவன், தன்னிடம் முனிவர் முன்பு ஒரு முறை கூறியதை நினைத்து பார்த்தான். மகனே, நான் மரணமடைந்த செய்தி கேட்டவுடன் நீ எங்கிருந்தாலும் என்னை பார்க்க வர வேண்டும். என்னுடைய மரணத்தில் உனக்கு சந்தேகம் ஏதேனும் இருந்தால், பக்கத்து அறையில் ஒரு பானை இருக்கும். அதில் இருக்கும் திரவத்தை எடுத்து வந்து என்னுடைய வாயில் ஊற்றுமாறு கூறியது நினைவுக்கு வர, உடனே அந்த அறையில் இருந்த பானையை எடுத்து வந்து அதிலிருந்து ஒரு திரவத்தை முனிவர் வாயில் ஊற்றினான். சிறிது நேரத்தில் எந்த சலனமும் இல்லாமல் முனிவர் உயிருடன் எழுந்து அமர்ந்தார்.

இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த அந்த வாலிபன் அதிர்ச்சி அடைந்தான். மற்ற சீடர்களை பார்த்த முனிவர் அவர்களை வெளியே இருக்கும் படி கூறிவிட்டு, அந்த வாலிபனை தன்னருகே அழைத்தார். உடனே அந்த வாலிபன் முனிவரின் காலில் விழுந்து முனிவரே என்னை மன்னித்து விடுங்கள், ஆசை என்ற அரக்கன் என் கண்களை மறைத்து விட்டான். அதனால் தான் என்னுடைய குணத்தை மறந்து இப்படி ஒரு கேவலமான செயலை செய்துவிட்டேன் என்று கண்ணீர் விட்டு அழுதான்.

அமைதியாக அவனை பார்த்துக் கொண்டிருந்த முனிவர் மகனே, இப்போது சொல் நீயும் சுயநலக்காரன் தானே, உனக்கு ஒரு பதவி கிடைக்கப் போகிறது என்றதும் ஆசை என்ற விஷம் உன் உடலில் பரவி, உன்னுடைய சுயநலத்திற்காக எதையும் செய்ய துணிந்து விட்டாய். இது நாள் வரை உனக்கு இது போன்ற சந்தர்ப்பம் கிடைக்காததால் நீயே உன்னை நல்லவன் என்று நினைத்துக் கொண்டாய். உன்னுடைய குணத்தை பரிசோதிக்கவே, உன் ஆசைகளை நான் தூண்டிவிட்டேன். அந்த ஆசை என்ற வலையில் சிக்கி நீயும் சுயநலக்காரன் என்பதை உணர்ந்து விட்டாய். மகனே, சுய ஒழுக்கம் என்பது கெட்டது செய்வதற்கான சந்தர்ப்பங்கள் அமைந்தாலும், அந்த சந்தர்ப்பங்களில் மனதை கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொண்டு, நல்வழியில் நடக்க வேண்டும். அதுதான் உண்மையான சுய ஒழுக்கம்.

உனக்குத் துரோகம் செய்தவர்கள் இப்போது எப்படி உனக்கு சந்தர்ப்பம் கிடைத்ததும் அதை நீ பயன்படுத்திக் கொண்டாயோ, அதைப்போலவே, அவர்களுக்கான சந்தர்ப்பம் கிடைக்கும் போது அந்த நேரத்தில் அந்த சந்தர்பத்தை பயன்படுத்தி கொண்டார்கள்.

எவன் ஒருவன் பொன்னாசை, பெண்ணாசை, மண்ணாசை இந்த மூன்று ஆசைகளில் தன் மனதை கண்டபடி அலைவிடாமல் தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறானோ அவன் தான் மனிதன். ஏதேனும் ஒரு ஆசையை தவறாக பயன்படுத்தும்போது அது அவர்களின் வாழ்க்கையை தவறான பாதைக்கு அழைத்துச் சென்று விடும்.

எப்போது மனிதனின் மனம் இதுவே போதும் என்று ஏற்றுக்கொள்கிறதோ அப்போதுதான் வாழ்வில் வசந்தங்கள் தோன்றும் என்று முனிவர் கூறி முடிக்க தன்னையும், தன் செயலையும் நினைத்து வெட்கித்தலைகுனிந்து நின்றுகொண்டிருந்தான்.

இங்கு நம்மில் பலரும் அந்த வாலிபனைப் போலத்தான் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விஷயத்தில் சுயநலக்காரர்களாகவே இருக்கின்றோம். மற்றவர்களின் குறைகளை மட்டுமே கவனித்துக் கொண்டு, அவரவர்களின் குறைகளை மறைத்து விடுகிறோம். ஆசை என்ற பூட்டை மனம் என்ற சாவியை கொண்டு கட்டுப்படுத்த பழகிக் கொள்ளுங்கள். அப்படி பழகிக்கொண்டால் உங்கள் வாழ்க்கையில் வசந்தங்கள் மட்டுமே உங்களை வரவேற்கும்.

अरुट्पेरुञ्जोति
तनिप्पेरुङ्करुणै

अरुट्पेरुञ्जोति
अरुट्पेरुञ्जोति

शिवमय

तिरुच्चिट्रम्बलम्

शुद्ध-सन्मार्ग का पहला साधन

# जीवकारुण्य शीलता

# JEEVAKARUNYA GOOD DISPOSITION

(HINDI)

# ஜீவகாருணிய ஒழுக்கம்

(ஹிந்தியில்)

पहला भाग

## जीवकारुण्य शीलता ही ईश्वर की आराधना होती है।

इस संसार में, मनुष्य-जन्म लिये हुए लोगों को अपने जन्म के द्वारा प्राप्त करनेवाले आत्मलाभ को, अपने जीवन-काल में ही जानकर प्राप्त करना चाहिए।

**1. वह आत्म लाभ क्या है? इसे जानना है तो –**

सारे ब्रह्माण्ड को, सारे भुवनों को, सभी चीजों को, सभी जीवों को, सभी शीलों को, सभी लाभों को अपने पूर्ण प्रकृति के स्पष्टीकरण के रूप की कृपाशक्ति से प्रकट होकर, समझने और समझानेवाले, प्रकृति के सत्य स्वरूपवाले 'ईश्वर' के पूर्ण प्रकृति आनन्द पाकर,

हमें इस सत्य को जानना चाहिए कि किसी भी काल में, किसी भी स्थान पर, किसी भी तरह, कितने भी हों, बिना रुकावट के जीनेवाले एक अनुपम उन्नत जीवन ही मनुष्य जन्म के द्वारा प्राप्त करानेवाले आत्म लाभ है।

# மனதை அடக்க இது ஒன்றுதான் வழி

நெற்றிக் கண்ணைத் திறக்கப்பெற்றுக் கொண்டவனுக்கு எல்லா அனுபவங்களும் பட்டப்பகல் போல் தெரியும். அவன்தான் சுத்த ஞானி. மேற்படி ஞானி தயவோடு ஒரு பிரேதத்தைப் பார்த்த மாத்திரத்தில் பிரேதம் உயிர் பெற்றெழும். நெற்றிக்கண்ணைத் திறப்பதற்கு ஒரு கதவும் பூட்டும் உள்ளது. அந்த பூட்டை அருள் என்கிற திறவுகோலைக் கொண்டு திறக்க வேண்டும். அருள் என்பது ஆன்ம இயற்கையாகிய பெருந்தயவு. நாம் தயவடிவமானால் மேற்படி அனுபவம் நேரும் என்பார் வள்ளல் பெருமான். நெற்றிக் கண் என்பது ஆன்ம அறிவு. நெற்றிக் கண்ணானது அஞ்ஞானத்தால் பூட்டப் பட்டுள்ளது. அதனை திறக்கும் சாவியே பெரும் கருணை. அந்த சாவி ஒவ்வொருவரின் மனங்களிலும் புதைந்து கிடைக்கின்றது. எனவே நல் ஒழுக்கத்தைக் கொண்டு அந்த சாவியை தோண்டி எடுக்க வேண்டும். எனவே தான் வள்ளல் பெருமான் 4 ஒழுக்கங்களை அருளி இருக்கின்றார். இந்த 4 ஒழுக்கங்கள் நமக்கு மரணமிலாப் பெருவாழ்வைக் கொடுக்கும் என்கின்றார். ஒழுக்கத்தின் மூலம் கருணை வளர்க்கப்படுகின்றது. கருணையின் மூலமே நெற்றிக் கண் திறக்கப்படுகின்றது.

நல் ஒழுக்கத்தில் பழகி ஜீவகாருண்யம் செய்யும் பொழுது அது கடவுளின் பூரண அருளைக் கொடுக்கின்றது. அருள் என்பது கடவுளின் கருணை. ஜீவகாருண்யம் என்பது ஜீவர்களின் கருணை. கருணையைக் கொண்டுதான் கருணையைப் பெற முடியும் என்கிறார் வள்ளல் பெருமான். பிற உயிர்களிடம் நாம் கருணைக் காட்டும் போதுதான் கடவுளின் கருணையாகிய அருளைப்பெற முடிகிறது. எல்லோருக்கும் கருணை உண்டு. அது அவரவர்களின் பக்குவத்திற்கு ஏற்ப ஒரு எல்லைக்குள் உள்ளது. அந்த எல்லையைத் தாண்டி நாம் கருணையை வளர்த்துக் கொண்டே சென்று, அதனை எல்லையற்றதாக பெருங்கருணை பேரறிவாக மாற்ற வேண்டும். கருணையை வளர்க்க நல்லொழுக்கம் ஒன்றே வழி. அந்த ஒழுக்கமே கருணையை வளர்க்கும், பக்குவத்தை கொடுக்கும், மனத்தை அடக்கும். பக்குவமுடையவரால் மட்டுமே இறைவனின் அருளை பரிபூரணமாக பெற முடியும். மனத்தை இறைவனின் அருள் துணையால் அடக்க முடியும்.

படிப்படக்கிக் கேள்விஎலாம்
பற்றவிட்டக்கிப் பார்த்திடலும் அடக்கி
உறும் பரிசம் எலாம் அடக்கித் துடிப்புறும்
ஊன்சுவை அடக்கிக் கந்தம் எலாம்
அடக்கிச் சாதி மதம் சமயம் எனும்
சழக்கையும் விட்டக்கி மடிப்படக்கி
நின்றலும் நில்லேன் நான் எனவே
வனகுரங்கும் வியப்பஎன்றான் மனகுரங்கு
குதித்த துடிப்படக்கி ஆட்கொண்ட துரையை

என்றார் வள்ளல் பெருமான். நாம் அடக்கி நின்றால் நான் நிற்க மாட்டேன் என்று குதிக்கும் மனக் குரங்கை கண்டு காட்டில் உள்ள குரங்கும் வியக்கும். அப்படிப்பட்ட மனக்குரங்கின் துடிப்பை அடக்கி ஆட்கொண்ட இறைவா என்கிறார் வள்ளல் பெருமான். எனவே இறைவனின் துணையின்றி மனதை அடக்க இயலாது.

இறைவன் எப்பொழுது துணை செய்வார்? இறைவன் துணை செய்து கொண்டு தான் இருக்கின்றார். பிறகு ஏன் மனத்தை அடக்க முடியவில்லை என்றால் அவர் துணையை பயன்படுத்திக் கொள்ளும் பக்குவம் நமக்கு இல்லை. ஏன் பக்குவம் இல்லை என்றால் நாம் நல் ஒழுக்கத்தில் பழகவில்லை. மனத்தை நல்வழியில் பழக்கினால் மட்டுமே ஆண்டவர் செய்யும்

துணை நமக்கு பயன்படுகின்றது. நெருப்பானது கற்பூரத்தில் பட்டால் உடனே தீப்பற்றும், கறிக்கட்டையில் பட்டால் சற்று தாமதமாகும், வாழைமட்டையில் பட்டால் தீ பற்றவே பற்றாது. அதுபோல் கற்பூர புத்தி உடையவர்கள் மனதை நல் வழியில் செலுத்துகிறார்கள். அவர்களுக்கு ஆண்டவர் செய்யும் கருணை உடனே பயன்படுகிறது. கறிக்கட்டை புத்தி உடையவர்கள் மனத்தை நல்வழியில் செலுத்த விரும்பி முயற்சிக்கின்றார்கள் அவர்களுக்கு ஆண்டவர் செய்யும் துணை சற்று தாமதமாக கிடைக்கின்றது.

வாழைமட்டை புத்தி உடையவர்கள் மனதை நல்வழியில் செலுத்த விரும்புவதில்லை. மனம் போன போக்கில் செல்வார்கள். அவர்களுக்கு என்னதான் ஆண்டவர் துணை செய்தாலும், அது பயனற்று போய் விடுகின்றது. ஆண்டவர் அனைவருக்கும் பொதுவிலே அருளுகின்றார். ஏன் பக்குவமுள்ளவர்களுக்கு பரிபூரண அருள் கிடைக்கும் என்றால், பக்குவம் அல்லாதவருக்கு கிடைக்கப்படும் வரம் கூட சாபமாகும். ஒழுக்கமற்று, பக்குவமின்றி ஓராயிரம் ஆண்டுகள் வாழ்ந்தாலும் அது சாபமே. ஒழுக்கத்தோடு ஒரு ஆண்டு வாழ்ந்தாலும் அது வரமே. இப்பொழுது நாம் இருக்கும் பக்குவத்தோடு, நாம் மரணமில்லா பெருவாழ்வைப் பெற்றாலும் அது நமக்கு வரமாக இருக்காது.

ஒரு பாலை நீண்ட நாட்களாக பாலாகவே வைத்திருந்தால் அது கெட்டுப் போய் துர்நாற்றம் வீசும். அதுபோல் பக்குவம் இல்லாமல் நீண்ட நாட்கள் வாழ்ந்தாலும் நோய், முதுமை, வேதனை என்று துன்பத்தில் ஆழ்வோம். பால் தயிராகி, தயிர் வெண்ணையாகி, வெண்ணெய் நெய்யாகி, நெய் தீபம் ஆகி முடிவில் முற்றிலும் கரைந்து விடுவது போல், இந்த தேகம் நல் ஒழுக்கத்தாலும், கருணையாலும், சுத்த தேகம், பிரணவ தேகம், ஞான தேகமாகி சுடர் விட்டு எரியும் தீபமாகி பின்பு ஒன்றும் இல்லாமல் இறைவனோடு இரண்டறக் கலப்பதே மரணமில்லாப் பெருவாழ்வு. பக்குவமில்லாமல் ஒரு வரத்தைப் பெற்றால் அது துன்பமாகவே இருக்கும் என்பதற்கு வள்ளல் பெருமான் வாழ்வில் ஒரு நிகழ்வு உண்டு. அந்த நிகழ்விற்கும் வள்ளல் பெருமான் அருளிய ஒழுக்கங்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

ஆறுமுகம் என்ற அன்பர் ஒருவர் வள்ளல் பெருமானிடம் அற்புத சித்திகளை தரும் குளிகையைப் பெற விரும்பினார். வள்ளல் பெருமான் 2 மிளகு அளவு உள்ள குளிகையை எடுத்து அவர் கையில் கொடுத்தார். ஆஹா நமக்கு வரம் கிடைக்கப்போகிறது என்று நினைத்தார் ஆறுமுகம் அவர்கள். ஆனால் 2 மிளகு அளவே உள்ள அந்த குளிகையின் பாரம் தாங்க முடியாமல், அதனை கீழே போட்டு விட்டார் ஆறுமுகம். அந்த குளிகையை தொடும் பக்குவம் கூட தனக்கு இல்லை என்று உணர்ந்து கொண்டு அவர் வள்ளல் பெருமானை பார்த்தார். வள்ளல் பெருமான் மேல் சுவரின் மீது காகிதத்தில் ஒட்டி வைத்திருந்த சன்மார்க்க பெருநெறி ஒழுக்கத்தைக் காட்டி முதலில் இதைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்றார்.

இந்த நிகழ்வு ஒழுக்கத்தின் அவசியத்தை நமக்கு நன்கு உணர்த்தும். எனவே முதலில் மனம் பக்குவப்பட வேண்டும். பிறகு அது இறைவனின் அருள் துணையால் தான் வசப்படும். அதன் பிறகு கிடைக்கப்படும் வரங்கள் மட்டுமே நல்வரங்களாக இருக்கும்.

மனத்தை அடக்க ஒரே வழி அவற்றை நல் ஒழுக்கத்தில் பழக்கி பண்பட செய்வது. பண்பட்ட மனத்தில் கருணை வளர்கிறது. பழக்கப்பட்ட பெரும் கருணையே நெற்றிக்கண்ணைத் திறக்கும் திறவுகோலாக இருக்கின்றது. எனவே நாம் முதலில் பக்குவத்தை வரவழைத்துக் கொள்ள வேண்டும். பக்குவ ஆன்மாக்களினிடத்தில் கடவுள் அருள் வழிப்பட்டால் சுத்தமாகி மூன்றின் தேகமும் அத்தருணமே வரும்.

# இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம் தோற்றுவாய்

பெரியோர் கொள்கையை வீழ்த்தி அவர் தம் உருவத்துக்கு மட்டும் நம்மவர் விழாக் கொண்டாடுகின்றனர். இக்கொடுமையை யாண்டுச் சென்று முறையிடுவது? ஆண்டவனே! உன்னிடத்திலேயே முறையிடுகிறேன். வேறு களைகணில்லை. என் நாட்டார்க்கு நல்லறிவுச் சுடர் கொளுத்துவாயாக.

சமரசம் என்பது நாடு, மொழி, சமயவெறி, சாதி முதலியவற்றில் கட்டுப்படாது கடந்து நிற்பது. எல்லா நாட்டினர், எல்லா மொழியினர், எல்லாச் சமயத்தார், எல்லாச் சாதியாரிடத்திலும் புகுந்து நிற்பது சமரச ஞானம். நாடு மொழி சமயம் சாதி முதலியவற்றைக்கொண்டு, சமரச உணர்வை இழப்பது அறியாமை. இப் பன்மைகளினூடே. படர்ந்து நிற்கும் ஒருமையே சமரசம். அச்சமரசமே கடவுள் காட்சியை நல்கும். அதையே இயற்கை அன்னை மக்க ளிடை ஓம்ப முனைந்து நிற்கிறாள். அவள் முயற்சிக்கு எவருங் குறுக்கே நிற்றலாகாது. இதுகாறும் மனிதன் அறியாமையால் இயற்கை அன்னையை மறந்து இடர்ப் பட்டது போதும்! போதும் ! இனியாதல் சமரசத்திற்கு மனிதன் இடந்தந்து வாழ்வானாக.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே, இனி வரும் உலகிற்கு வேண்டற்பாலதாய சமரசத்தை இராமலிங்க சுவாமிகள் அறிவுறுத்திச் சென்றார். அவர் அருளிய சமரசப் பாக்கள் ஒன்றா ? இரண்டா? ஆயிரம்; ஆயிரம். அவற்றை அருட்பாவில் பார்க்க. தாலிபுலாக. நியாயம் பற்றிச் சில பாக்களைமட்டும் ஈண்டுத் தருகிறேன்.

**'சாதியும் மதழஞ் சமயழங் காணா**
**ஆதி அநாதியாம் அருட்பெருஞ் ஜோதி**

**சாதியும் மதமுஞ் சமயமும் பொய்யென**
**ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்ஜோதி**
**சமயங் குலமுதல் சார்பெலாம் விடுத்த**
**அமயந் தோன்றிய அருட்பெருஞ் ஜோதி.**
**சமரச சத்தியச் சபையில் நடம்புரி**
**சமரச சத்தியத் தற்சுயஞ் சுடரே**

**சாதியும் மதமுஞ் சமயமுந் தவிர்த்தேன்**
**சாத்திரக் குப்பையுந் தணந்தேன்**
**நீதியும் நிலையுஞ் சத்தியப் பொருளும்**
**நித்திய வாழ்க்கையுஞ் சுகமும்**

**ஆதியும் நடுவும் அந்தமும் எல்லாம்**
**அருட்பெருஞ் ஜோதியென் றறிந்தேன்**
**ஓதிய அனைத்தும் நீயறிந் ததுநான்**
**உரைப்பதென் னடிக்கடி யுனக்கே**

**குலத்திலே சமயக் குழியிலே நாகக்**
**குழியிலே குமைந்து வீண் பொழுது**
**நிலத்திலே போக்கி மயங்கியே மாந்து**
**நிற்கின்றார் நிற்கநா னுவந்து**
**வலத்திலே நினது வசத்திலே நின்றேன்**
**மகிழ்ந்து நீ யென்னுள மெனுமம்**
**பலத்திலே நின்றாய் எனக்கிது போதும்**
**பண்ணிய தவம்பலித் ததுவே'**

கிழக்குவெளுத் ததுகருணை அருட்ஜோதி உதயங்
கிடைத்ததெனத் துளக்கமலங் கிளந்ததென தகத்தே
சழக்குவெளுத் ததுசாதி யாச்சிரமா சாரஞ்
சமயமதா சாரமெனச் சண்டையிட்ட கலக
வழக்குவெளுத் ததுபலவாம் பொய்ந்நூல்கற் றவர்தம்
மனம்வெளுத்து வாய்வெளுத்து வாயுறவா தித்த
முழக்குவெளுத் ததுசிவமே பொருளெனுஞ்சன் மார்க்க
முழுநெறியிற் பரநாத முரசுமுழங் கியதே'

# நமக்குள் தேடுவோம் வள்ளலாரை – 2

# ஒரு புன்னகையின் விலை 17 ரூபாய்!



ஒரு புன்னகையின் விலை 17 ரூபாய் என்றதும் பலருக்கும் ஆச்சர்யம் வரும். ஏன் சிலருக்கு சிரிப்பு கூட வரலாம். ஆனால் அது தான் உண்மையும் கூட. கடந்த மாதத்தில் ஒரு நாள் அதிகாலை 5 மணி இருக்கும். புதூர் பேருந்து நிலையத்தில் எனக்கான பேருந்துக் காக காத்து நின்றேன்.

அன்றைய நாளின் முதல் பேருந்து சொற்ப பயணிகளை சுமந்து கொண்டு என் அருகில் வந்து நின்றது. தண்டுவ டத்தின் தாறுமாறான வலியால் மெல்லிய சோகத்துடன் பேருந்தில் ஏறி ஓட்டுன ரின் அருகில் உள்ள இருக்கையை தேடி சென்று அமர்ந்தேன்.

இதனைக் கண்ட நடத்துனர் இவ்ளோ இடம் காலியா இருக்கும் போது எங்க போய் உட்காருகிறான் பாரு? என நினைத்து இருப்பார் போல, அவர்இருக்கையில் இருந்து எழுந்து கடு கடு முகத்துடன் என்னை நோக்கி வந்தார்.

புழல் கேம்ப் ஒரு டிக்கெட் என அவ ரிடம் சில்லறை 17 ரூபாயை நீட்டினேன். அந்த கணம் அதுவரை கடு கடு வென இருந்த அவர் முகத்தில் அப்படி ஒரு புன்னகை. தம்பி நன்றிப்பா என உணர்ச்சி பெருக்கால் அவர் என்னை நோக்க. நான் அப்போது தான் அவரை கவனித்தேன். அவர் முகத்தில் எதையோ சாதித்தது போல அப்படி ஒரு சந்தோசம். அந்த சந் தோசம் நான் பேருந்தை விட்டு இறங்கி செல்லும்போது அவர் எனக்கு டாட்டா காட்டும் வரை தொடர்ந்தது.

அவரின் புன்னகை எனக்குள்ளும் பர வியது. எனக்குள் இருந்து இருந்த வலி மறந்து போனது. அலுவலகத்தில் புன் னகையுடன் சக பணியாளர்களை எதிர் கொண்ட போது வேலைகள் சிறப்பாக நிறைவடைந்தது . அன்றைய நாள் எனக்கு மிகவும் சிறப்பாய் இருந்தது.

17 ரூபாய் சில்லறைக்கு அவர் மகிழ்ச்சி அடைகிறார் என்றால் அவரின் பணிச் சுமை கண் முன் வந்து போனது. அவரின் புன்னகையை கண்ட போது ஒரு காதலன் காதலியிடம் காட்டும் புன்னகையை விட, ஒரு தந்தை தன் குழந்தையிடம் காட்டும் புன்னகையை விட உயர்வாய் தோன்றி யது எனக்கு.

ஆம் இந்த புன்னகையின் சக்தி எவ்வ ளவு என்பதை புரிந்து கொண்டேன்.

ஒரு முதலாளி தன் தொழிலாளியிடம் காட்டும் சிறு புன்னகை தொழிலாளியின் வேலை திறன் அதிகரிக்கலாம்.

ஒரு மருத்துவர் தன் நோயாளியிடம் காட்டும் புன்னகை அந்த நோயாளியின் நோயை குணப்படுத்தலாம்.

ஒரு ஆசிரியர் தன் மாணவனி டம் காட்டும் புன்னகை அவன் கல்வி தரத்தை உயர்த்தலாம். யாருக்கு தெரியும் முன்பின் தெரியாத யாரோ ஒருவ ருக்கு நாம் காட்டும் புன்னகை அவரின் வாழ்க்கையை கூட மாற்றலாம்.

–கோபிநாத்

சீகாழி.கண்ணுடைய வள்ளல் அருளிச் செய்த

# ஒழிவில் ஒடுக்கம்

திருப்போரூர் சிதம்பரசுவாமிகள் உரையிலிருந்து வினா–விடையாகத் தொகுத்தவர். ஜோதி.வீ.கோட்டீஸ்வரன், காஞ்சிபுரம்.

**35.பழுதையைப் பாம்பென்ற பயம்போனால் பாவித்(து)
அழுது உடம்பை ஆட்டுகினும் ஆமோ–தொழில்ஒழிவில்
நின்றசிவ யோகி நினைத்தொருகால் நீவாராய்
என்றழைத்தா லும்பதையா(து) என்.**

***சிவயோகிக்கு அவத்தைகள் சாரமாட் டாது என்பது எப்படி?***

*★ இருளால் பழுதையைப் (கயிறு) பாம்பென்று கண்டு பயம் நடுக்கம் ஏற் படும். சுடரால் அறிந்த பழுதையில் முன் னிருளால் தோற்றிய பாம்பு இருப்பதாய்ப் பாவித்து பயந்தது போல், அழுது உடலை நடுக்கினும், முன்போலும் பயம் நடுக்கம் உண்டாகா. அது போல்,*

*★மல இருளால் மெய்போல் தோற்றிய அவத்தைகளை, இப்போது ஞான சூரி யனால் பொய்யெனக் கண்டு, அவ் அவத்தக்களை நடத்தும் பஞ்ச கிருத்தி யங்களையும் கடந்து மேல் நின்ற சிவத் தில் அதீதப்பட்ட சிவயோகி கருதி, அவத் தாய், ஒரு தரம் மீட்டு இங்கு நீ வருதி என்று அழைப்பினும், இப்போது அணுவ ளவேனும் அசையாதிருத்தது என்னோ?*

*★சிவயோகிக்குச் சீவகாருண்ய முதலி யவற்றால் மௌனாநத்தம் ததும்பிற்றாயி னும் திருவருள் வடிவாய் நிற்பதின்றி மாய வடிவம் ஆகான். ஆகலினும், சூரிய பிர காசத்தில் இருள் தோற்றாது அதுபோல், ஞானப்பிரகாசத்தில் மாயந்தகாரம் தோற் றமாட்டாது என்பதாம்.*

**36. கன்னிக் கதலிதனை நார்கழிப்பான் கண்போலத்
தன்னையறி யாஅறிவே தான்மீளச் – சொன்னாலு(ம்)
நாவென்ற நாவேபோல் நான் என்ற சொல்லளவே
ஆம்அன்றித் தான்எதிர் ஆகா.**

***சிவயோகி தான் பிறர்போல் கூறினும் இவை அவனுக்கு இல்லை என்பதை எவ்வாறு அறிவது?***

*★ ஈனா வாழையினது மட்டை நார் கழிக்கத் தொடங்கினோன் கண் அம் மட்டை உளது உளதென்று சுட்டி பார்க் குந்தோறும் அவனது கை மட்டைகளை எல்லாம் கழித்துச் சென்று அதனுள் இருந்த குருத்தையும் விரித்து விடுத்த போது, முன்போல் சுட்டுதற்கு வேறொன் றும் இன்றிச் சும்மாயிருந்த கண்போலும்,*

*★ ஆசாரியன் விவேகத்தால், 36 கரு விகளையும், விடுவிக்கத், தான் கடந்து சென்று அவற்றின் முடிவில் நின்ற அருளை யும், பரையையும் கடந்து அதன் மேல் தோன்றும் ஆனந்தத்தையும் எதிரிடாது அதனுள் அதீதப்பட்டு இருந்த சிவயோகி, தன்னை அறியா அறிவே ஆவன். அவ் வறிவாய் இருந்தோன் மீட்டும் நீ நான் என்று பிரித்து அவ்வறிவு ஏற்றற்பொருட்டு மாணாக்கனுக்கு அறிவித்தான் எனினும்,*

*★நாவானது தன்பெயரை நாவென்று கூறினும் அப்பெயர்க்குரிய பொருள் வேறின்றித் தானாயிந்த அந்நாவைப்போ லும் நீ நான் என்று சொல்மாத்திரமே யாம் அன்றி தானும் எதிரும் அவனுக்கு உண்டாகாது என்பதாம்.*

# வள்ளலாரின் புத்தகங்கள்

| | |
|---|---|
| 1. HOW SOUL BECOMES LIGHT | – ரூ.120 |
| 2. சத்திய ஞானசபைத்தத்துவ விளக்கம் | – ரூ.80 |
| 3. THE JOURNEY | – ரூ.50 |
| 4. திருவருட்பிரகாச வள்ளலார் வாழ்வில் நடந்த அற்புதங்கள் | – ரூ.20 |
| 5. வள்ளலார் வரலாறு (வினா–விடை) | – ரூ.30 |
| 6. திருவருட்பிரகாச வள்ளலார் அருளிய உபதேசங்கள் | – ரூ.10 |
| 7. திவ்ய ஒளி | – ரூ.50 |
| 8. அருட்குறள் | – ரூ.50 |
| 9. ஐந்தாம் திருமுறை | – ரூ.200 |
| 10. ஆறாம் திருமுறை | – ரூ.150 |
| 11. சாகாநிலை சத்திய வாழ்வு | – ரூ.50 |
| 12. சுத்த சன்மார்க்கம் வினா–விடை | – ரூ.30 |
| 13. நாளந்தாதி | – ரூ.40 |
| 14. அகவல் பாராயணத்திரட்டு (சிறியது) | – ரூ.15 |
| 15. அகவல் பாராயணத்திரட்டு (பெரியது) | – ரூ.30 |
| 16. உரைநடைப்பகுதி | – ரூ.200 |
| 17. அருட்பெருஞ்ஜோதி அகவல்விளக்கவுரை | – ரூ.225 |
| 18. வள்ளலார் பேனா | – ரூ.35 |
| 19. மகாமந்திரபெட்டி | – ரூ.600 |

# மூலிகை மருந்துகள்

| | |
|---|---|
| 1. கூட்டுசூரணம் (50கி) | – ரூ.60 |
| 2. கரிசாலை (50கி) | – ரூ.60 |
| 3. திரிபலா (50 கி) | – ரூ.60 |
| 4. முடவட்டான் கால்சூப் (50 கி) | – ரூ.100 |
| 5. மூச்சுடர் கரிசாலைத்தைலம் 200 (எம்.எல்.) | – ரூ.300 |
| 6. அகத்தியர் கருவப்பட்டை பற்பொடி (80 கி) | – ரூ.45 |
| 7. கரிசாலைக் கண் மருந்து | – ரூ.70 |
| 8. மூலிகைத்தைலம் | – ரூ.40 |
| 9. மூலிகை மிட்டாய் | – ரூ.10 |
| 10. சுக்குபொடி (50 கி) | – ரூ.55 |

# அருள்ஜோதி TV


அருள்ஜோதி

Aruljothi TV APP

**TCCL கேபிள் TV Channel No : 125**

## நிகழ்ச்சிகளின்
## சன்மார்க்கிகளின் கருத்துக்கள்...













**அருள்ஜோதி தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பான நிகழ்ச்சிகளை 'ARULJOTHI YOUTUBE CHANNEL' மூலம் காணலாம்.**


**ARULJOTHI MEDIA**

No.:33, KENNEDY SQUARE MAIN ROAD,
TVK NAGAR, PERAMBUR,
CHENNAI – 600011

**CONTACT: 7305263516 044-35519288**

EMAIL: aruljothitelevision@gmail.com

WEB: aruljothitv.com


**BANK DETAILS**

**ARULJOTHI SANMARKKA TRUST**
**INDIAN BANK**
**A/C.No.:6206014778**
**IFSC CODE: IDIB000P034**
**BRANCH : PERAMBUR**

Aruljothi TV
+91 73052 63516

8883360800@okbizaxis


**Published by: S. Dhanalakshmi ,**

Published from New No.:33/Old No:17, Main Road, Kennedy Square, Thiru.Vi.Ka.Nagar, Perambur, Chennai – 11 Editor: Thayathirumati. Dhanalakshmi Ammaiyaar Printed at bharanipress, No77, Venkatadhiri street, kosapet, Chennai - 600012